

# சங்கநாதம்

# SANGANATHAM



கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகம் – கொழும்பு
திவ்விய ஜீவன சங்கம் – திருக்கோணமலை



# சங்க நாதம்

## மாதாந்த ஆன்மீக சஞ்சிகை

சங்கநாதம் சிறப்புறப் பங்கு பற்றும் அமைப்புக்கள்

சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக்கழகம் - [கொழும்பு (தலைமையகம்) மாத்தளை]

திவ்விய ஜீவன சங்கம் - சிவானந்த தபோவனம் - திருக்கோணமலை

ஸ்ரீ இராமகிருஷ்ண விவேகானந்த பேரவை - பதுளை

முழக்கம் 3 புரட்டாதி மாதம் 2000,
விலை 10/=

வெளியீடு

சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகம்
Youth League For Sanathana Dharmic Perception
No:03, Ridgway Place Colombo -04, Sri Lanka
Tel : 584145

# தமிழர்களே உங்கள் வரலாறு தெரியுமா?

என்றும் அன்புக்குரிய சங்கநாத வாசகர்களே! எமது கடந்த இலங்கையின் பூர்விகக் குடிகள் யார் என்ற வினாவிற்கான பதிலாக இலங்கையின் பூர்விகக் குடிகள் இயக்கரும், நாகரும் என்று கூறியிருந்தோம். இந்த இதழில் நாகர்களைப் பற்றிய செய்திகளை உங்களுக்குத் தருகின்றோம்.

இலங்கை வரலாற்று நூல்கள் யாவுமே நாகர்களைப் பற்றிய செய்திகளுடனேயே தொடங்குகின்றன. நாகர்கள் கடல் கொண்ட பெருநிலப்பரப்பில் வாழ்ந்த தமிழினத்தின் ஒரு பகுதியினர் எனவும் அங்கிருந்து இலங்கைக்கும், தமிழகத்திற்கும், ஏனைய இந்தியப் பகுதிகளுக்கும் பரவினர் எனவும் தமிழ் பேரறிஞரான கா. சுப்ரமணிய பிள்ளை தாம் எழுதிய "தமிழ் இலக்கிய வரலாறு" (பாகம் 1) என்ற நூலில் எழுதியுள்ளார்.

கிடைக்கக் கூடிய இலக்கிய, தேசப்பட ஆதாரங்களில் இருந்து இலங்கையின் பல பகுதிகளிலும் நாகர்குடியிருப்புக்கள் இருந்துள்ளன என அறிய முடிகிறது. தெவிநுவர, நாகர்கோயில், திருக்கோயில் நனிசிரி, தென்கிழக்கில் நாகதுவீபம், நயினாதீவு என்னும் மணிபல்லவம், மதவாச்சி என்னும் மகாவிலாச்சி, காங்கேசன் துறை என்னும் ஜம்புக்கோளம், வல்லி புரப்பகுதி நாகர்கோயில், குருத்தன் குளம், மிகுந்தலைப்பகுதி நாகசதுர்க்கம், கந்தரோடை என்னும் கதிரமலை,- கரியாலை, நாகபடுவான் மகா தீர்த்தம் (மாந்தை) ஆகியன நாகர் குடியிருப்புகளாக விளங்கியுள்ளன. இவ்வாறு பண்டைய இலங்கைத் தீவு முழுவதும் நாகர் இன மக்கள் பரவி வாழ்ந்துள்ளனர் எனினும் சிறப்பாக நாகதீவு என வரையறுக்கப்பட்ட வடபகுதியில் செறிந்து வாழ்ந்துள்ளனர். இந்த ஆதிக்குடியிருப்புக்கள் ஒவ்வொன்றிற்கும் தந்தைவழிச் சமூக அமைப்பின் வழிமுறைப்படி ஒவ்வொரு தலைவன் ஆட்சிப் பொறுப்பை பூர்வ குடிகளான நாகர்கள் ஏற்றிருந்தார்கள். இவர்கள் நாக வழிபாட்டை மேற்கொண்டிருந்தனர். இதனாலேயே இவர்களுக்கு "நாகர்" என்ற பெயர் வழங்கப்பட்டது.

இவர்கள் நாகரீகத்திலும் அக்காலத்தில் சிறந்து விளங்கினர். நாகரீகம் என்னும் சொல் இவர்களின் சிறப்பினாலே வந்தது என "1800 ஆண்டிற்கு முற்பட்ட தமிழகம்" என்ற நூலில் அதன் ஆசிரியர் எழுதியுள்ளார். மேலும் நாகர்கள் கலைகளிலும், நாவாய் ஓட்டுவதிலும் (மரக்கலங்களை இலாவகமாக ஓட்டுதல்), நகர்கள் அமைப்பதிலும் வல்லவர்களாகவும் இருந்துள்ளனர் என்பதனையும் அறியமுடிகின்றது.

இலங்கையே நாகர்களின் தாயகம். கடல் கொண்ட தமிழகத்தின் வடபால் எஞ்சிய பகுதியாக இலங்கை இருந்ததே இதற்குக் காரணம். இலங்கையில் நாகர்களின் அரசுகள் மாந்தை, மணிபுரம் (நயினாதீவு) ஆகிய இடங்களில் இருந்தன.
மணிபுரம், கல்யாணி ஆகிய இடங்களில் இருந்த நாக அரசர்களிடம் பகவான் புத்தர் வந்தார் என இலங்கைப் பௌத்த இதிகாசமான மகாவம்சம் கூறுகின்றது. கி.பி 5ம் நூற்றாண்டைச் சேர்ந்த பாகியான் என்ற நாடுகாண் பயணி இலங்கையின் ஆதிக்குடிகள் பற்றிக் குறிப்பிடுகையில் இத்தீவிலே ஆதியிலே தேவதைகளும், நாகர்களும் இருந்தார்கள் என்றும்

அவர்கள் பல் வேறு நாடுகளைச் சேர்ந்த வியாபாரிகளுடன் வர்த்தகம் நடாத்தி வந்தனர் என்றும் குறிப்பிட்டுள்ளார். வர்த்தகம் நடாத்தக் கூடிய அளவிற்கு நாகர்கள் கலாச்சார மேம்பாடுடையவர்களாக விளங்கியிருக்கின்றனர். இத்தகவலைக் கலாநிதி க.குணராசா தமது "ஈழத்தவர் வரலாறு" என்ற நூலில் தந்துள்ளார்.

மாந்தை இலங்கையின் பெருந் துறைமுகமாக விளங்கியது. பிற நாடுகளின் வணிகத் தொடர்புகளிற்கு ஒரே துறைமுகமாக மாந்தை விளங்கியது. இதற்கு இங்கு கண்டு எடுக்கப்பட்ட பழைய சீன, உரோம நாணயங்கள் சான்றாக உள்ளன. நம் சமய குரவர்களில் ஒருவரான சுந்தரமூர்த்தி நாயனார் தம் தேவாரத் திருமுறைப் பாடலில் "வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகர்" எனப் பாடியுள்ளார். இவ்வாறு நாகர்கள் அக்காலத்தில் வர்த்தகத்தில் சிறந்து விளங்கியுள்ளனர்.

மேற்கூறப்பட்டவற்றிலிருந்து இலங்கையின் பூர்வீகக் குடிகளுடன் நாக இனத்தவர்கள் நாகரீகமான வாழ்க்கையை வாழ்ந்துள்ளனர் என அறிய முடிகிறது. மீண்டும் இவர்கள் பற்றிய பல செய்திகளுடன் அடுத்த இதழில்நாம் உங்களிடம் வருவோம்.

**ச.பிரதீபா,**
**(சனாதன தர்மக்கழகம்)**

# சமயச் சின்னங்கள்

1. ஓம் அல்லது ப்ரணவம்
2. பிள்ளையார் சுழி
3. புண்ட்ர தாரணம்
4. துளசி
5. ருத்ராக்ஷம்
6. வில்வ மஹிமை
7. சங்கு
8. சக்கரம்

## பிள்ளையார் சுழி (உ)

தமிழராகிய நாம் எதை எழுதத் தொடங்கும் போதும் "உ" என்று தாளில் மேல்பகுதியில் எழுதியே விஷயத்தை ஆரம்பிக்கின்றோம். இந்த "உ" என்பதையே "**பிள்ளையார்சுழி**" என்கிறோம். பிள்ளையார் சுழி எவ்வாறு தோன்றியது? நாம் எழுதும் எழுத்து வட்டவடிவானது. வட்டம் இயற்கையான வடிவம். அதுபோல் எழுதத் தொடங்குபவனும் வட்டம் இட்டான் விரைந்து எழுதும்போது வட்டத்தின் முடிவு நீள்கோட்டினில் முடியும். இதனையே "பிள்ளையார் சுழி" என்று பெயர் சூட்டினர் சிலர்.

வேறு சிலர் ஏட்டிலும் தாளிலும் எழுதும்போது எழுதுகோலின் நேர்மையை ஆராய சுழி இழுத்தார்கள். வட்டமும் கோடும் எழுத இவ்வெழுத்துகோல் பயன்படுமா? எனச் சோதித்துப் பார்த்தார்கள். தொடங்கும் எதையும் பிள்ளையாருடன் சேர்த்துவிடும் பெருந்தகையாளர்கள் இதனைப் "பிள்ளையார்சுழி" என்றார்கள். ப்ரணவம் பிள்ளையார் வடிவம். இவ்வடிவத்தின் திரிந்த வடிவமே "**பிள்ளையார்சுழி**" ஆகும். இப் ப்ரணவம் ஐந்து எழுத்துக்களின் கூட்டாகும்.

முதலுரு - நட்சத்திரவடிவம் (வட்டப்புள்ளி)
இரண்டாம் உரு - தண்டம் (படுக்கையில் கிடக்கும் கோடு)
மூன்றாம் உரு - வட்டம்
நான்காம் உரு - பிறைமதி
ஐந்தாம் உரு - பிந்து

இவற்றுள் வட்டப்புள்ளியும் நேர்கோடும் இணைந்து "பிள்ளையார்சுழி" ஆகிறது. ப்ரணவத்தின் ஐந்து எழுத்துக்களும் முறையே



அகாரம், உகாரம், மகாரம், பிந்து, நாதம் என்பனவாகும். இவற்றின் அதிதேவதைகள் முறையே ப்ரம்மன், திருமால், ருத்ரன், மஹேசன், சதாசிவன் என சிவஞான போதம் கூறுகிறது. "ப்ர" என்றால் விஷேசமானது. "**நவம்**" என்றால் புதுமை. எனவே அனுபவிக்க அனுபவிக்க புதுப்புது விசேஷ உண்மைகளை உணர்த்துவது ப்ரணவம். மந்திரங்கள் எல்லாவற்றுக்கும் மூலமாக இருப்பது ப்ரணவம். இதிலிருந்துதான் நாம் வாழும் ப்ரபஞ்சம் உண்டாகியது.

நாதஸ்வரூபிணியான அம்பாளே ஓங்காரமாகிய ப்ரணவமும் ஆவாள். அ, உ, ம, மூன்றும் சேர்ந்து "ஓம்" என்று ஒலிக்கிறது. அ-சிருஷ்டி உ- பரி பாலனம் ம- ஸம்ஹாரம் இதனாலேயே முத்தொழிலும் செய்யும் மூலசக்தியே ப்ரணவம். அம்பாளின் தொழில்களில் விசேஷமான கருணையைக் காட்டும் பரிபாலனத்தில் தொடங்கினால் உ, ம, அ அதுதான் "**உமா**" என்பதாகும். எனவே உமையை நினைவுபடுத்தவே "பிள்ளையார்சுழி"

**தொடரும்....**

**T. Roshanthy**
(சனாதன தர்ம கழகம்)

# உண்மைச் சம்பவம்

**நீண்ட நாட்களுக்கு முன்.........**

வெள்ளவத்தை, பம்பலப்பிட்டியில் உள்ள பிரபலமான இரண்டு ஆலயங் களுக்கு உங்களை கூட்டிச் செல்ல விரும்புகிறேன்.

**ஆலயம் 1** அங்கே வசந்த மண்டபப் பூஜை நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. சிறப்பாக மங்கள இசை வழங்கிக் கொண்டிருந்த மங்கள வாத்தியங்களின் இசை தற்காலிகமாக நிறுத்தப்படுகிறது. ஏனெனில் மதகுருமார் மந்திர பாராயணம் செய்கையில் மணி அடிப்பது கூட குற்றமாகவே கருதப்படும். ஆனால் நிலைமை மாற்றமடைகின்றது. ஆலய நுழைவாயிலில் மேள தாள முழக்கம் ஒலிக்கிறது. தோள்களில் மாலைகள் சகிதம் 2,3 பேர் அவர்களைச் சூழச் சிறு கூட்டம். பூஜை நடமுறைகளை மதியாதவர்களாய் வலம் வருகின்றனர்.

**ஆலயம் 2** சீருடை தரித்த பொலிஸ் அதிகாரி இந்த ஆலயத்திற்கு வருகிறார். வந்தவர் ஆலயம் தொழுது அர்ச்சனை செய்த பின் கோவில் அர்ச்சகர் வழங்கிய மாலையை அணிந்து அறங்காவலர் ஆசியுடன் கோவிலைச் சுற்றி வலம் வருகிறார். பக்தர்களிடம் ஒழுங்கை எதிர்பார்க்கும் கடுமையான மதிற்பிற்குரிய இந்த ஆலய அறங்காவலர் எவ்வாறு அனுமதி வழங்கினார்?

**"மக்களுக்கு ஒருசட்டம், அரசியல் சார்ந்தவர்களுக்கு இன்னுமொரு சட்டமா?"**

**அரசியல் வாதிகளுக்கு அரசியல் மட்டுமல்ல ஆலயம் தொழுவது பற்றிக் கூட, படிப்பிக்க வேண்டும் போலத் தோன்றுகிறது.**

வந்தவர்கள் அரசியல் வாதிகளாக இருக்கலாம். அதற்காக இந்து மதத்தை சார்ந்த வழிபாட்டு ஒழுங்குகள் இவர்களுக்கு தெரியாமலா இருக்கிறது. அரசியல் வாதிகளுக்கு மட்டும் வழிபாட்டு ஒழுங்குகளை மீறும் உரிமையுள்ளதா?

**எது எப்படியோ, ஆலய நிர்வாகம், ஆலயங்களை ஆலயமாக பேணுவதில் கவனம் செலுத்தினால் இவ்வாறான சீர்கேடுகள் இனியாவது நடைபெறாமல் தடுத்துக் கொள்ளலாம். செய்வார்களா?**

நன்றி
**யாழ்தமிழன்புக்கவி**

# வரதக்ஷிணை பிரச்சனை

ஒவ்வொருவருக்கும் எத்தனையோ விதமான கஷ்டங்கள், தொல்லைகள் இருக்கின்றன. அதையெல்லாம் சிறிது காலமாவது மறந்திருப்பதற்கே இங்கே பூஜை பார்க்கவும், உபந்நியாசம் கேட்கவும் வருகிறீர்கள். ஆனால் இந்த உபந்நியாசம் வெறும் பொழுது போக்காக மட்டும் இருந்தால் பிரயோஜனமில்லை. உபந்நியாசம் உபயோகமாக இருக்க வேண்டுமானால் அதில் உங்கள் வாழ்க்கையில் அநுசரிப்பதற்கு ஏதாவது ஒரு அம்சமாவது இருக்க வேண்டும். உங்களுக்குப் பிடிக்காத விஷயமாக இருந்தாலும் கூட உங்களுடைய க்ஷேமத்தை உத்தேசித்து நான் சில விஷயங்கள் சொல்லத்தான் வேண்டும். நீங்கள் அதைச் செய்வதும் செய்யாததும் உங்கள் காரியம். சொல்லத்தான் என்னால் முடிந்தது. 'ஜகத்குரு' என்று பெயர் வைத்துக் கொண்டு, உங்கள் பணத்தை எல்லாம் வாங்கிக் கொண்டு எனக்கு நல்லதாகத் தோன்றுவதை நான் சொல்லக் கூட இல்லை என்றால் அது பெரிய சந்தோஷம். அதற்காகவே சொல்கிறேன்.

சென்னை நகரத்தில் வந்து நீண்டகாலமாகத் தங்கியதில் என் மனதில் மிகுந்த கிலேசம் உண்டாக்கியுள்ள ஓர் அம்சத்தைச் சொல்வதற்காகத்தான் இத்தனை பீடிகை போடுகிறேன். இங்கே என்னிடம் வயது வந்த எத்தனையோ பெண்கள் தங்களுக்கு கல்யாணமாகவில்லை என்ற குறையுடன் கண்ணீரும் கம்பலையுமாக வந்து முறையிடுகிறார்கள். அவர்கள் மனசில் எத்தனை கஷ்டமும் தாபமும் இருக்கின்றது என்று எனக்குத் தெரிகிறது. இந்த பரிதாபகரமான காட்சி என்னை நிரம்பவும் வேதனைப்படுத்துகிறது.

கல்யாணம் என்றால் ஆடம்பரமாகச் செலவழிக்க வேண்டும் என்றாகிவிட்டது. இதை விட முக்கியமாகப் பிள்ளை வீட்டார் வரதக்ஷிணையும், சீர்வரிசையும் ஏராளமாகக் கேட்கிறார்கள். அன்றாட வாழ்க்கைக்கே கஷ்டமாக இருக்கின்ற நிலையில் இத்தனை செலவிற்கு எடுத்துக்கொடுத்து, சேமித்து வைக்க பெண்ணைப் பெற்றோர்களுக்கு முடியாமல் போகிறது. பணக்கஷ்டம் காரணமாகவே குழந்தைகள் கல்யாணமாகாமல் மாளாத மனக்குறையுடன் நிற்கிறார்கள்.

இதோடு விஷயம் நிற்கவில்லை. இதைத் தொடர்ந்து பாரத தேசத்தின் ஸ்திரீ தர்மத்துக்கே விரோதமான போக்குகள் உண்டாகின்றன. கல்யாணம் ஆகாத பெண்ணைப் படிக்க வைத்து, வேலைக்கு விட்டு அவளே சம்பாதிக்கும் படியாகப் பெற்றோர்கள் விடுகிறார்கள். முதலில் இது அவமானமானதாக இருந்தது. ஆனால் முதலில் தயக்கத்தோடு ஆரம்பிக்கிற ஓர் ஏற்பாடு வழக்கத்தில் வந்துவிட்டால் பிறகு அதில் கூச்சம் போய்விடுகிறது. முதலில் அவமானமாக நினைத்த விஷயமே பிறகு பழகிப்போய் விடுகிறது. அதுவே நாகரீகத்தின் அடையாளம் என்ற அளவிற்கு வந்து விடுகிறது. பெண்கள் உத்தியோகம் பார்ப்பது இப்படித்தான் ஆகிவிட்டிருக்கிறது. வயது வந்த பெண்கள் சர்வசகஜமாக ஆண்களுடன் சேர்ந்து உத்தியோகம் பார்ப்பது நம் தேச ஆசாரத்துக்கே விரோதமானது. இதனால் எத்தனையோ தம்பிதங்கள் நேருகின்றன. இதை எல்லோரும் கண்டும் காணாமல் இருப்பதுபோல் நானும் இருந்தால் பிரயோஜனமில்லை. என் மனதில் பட்டதை நீங்கள் கேட்டாலும், கேட்காவிட்டாலும், வெளியிட்டுச் சொல்வது கடமை என்பதால் சொல்லுகிறேன்.

பிள்ளைகளைப் பெற்றவர்கள் ஒரு காலும் வரதக்ஷிணை வாங்குவதில்லை என்று தீர்மானம் செய்ய வேண்டும். மற்ற விஷயங்கள் திருப்தியாக இருந்தால் கல்யாணத்தை முடிக்க முன்வர வேண்டும். வரதக்ஷிணை கேட்டால் தான் தங்களுக்கு மதிப்பு, வரதக்ஷிணை கேட்காவிட்டால் தங்கள் பிள்ளைக்கு ஏதோ குறை என்று நினைப்பார்கள் என்பது போன்ற எண்ணங்களை விட்டு, எல்லோருக்கும் சந்தோஷம் தரும் வகையில் கல்யாணத்தை முடிக்க வேண்டும். தேசத்துக்காக, பாஷைக்காக, அரசியல் கொள்கைக்காக இந்த வரதக்ஷிணையை தியாகம் செய்யக்கூடாதா?

வரதக்ஷிணைப் பழக்கமும், கல்யாணங்களை டாம்பீகமாக நடத்துகிற வழக்கமும் தொலைய வேண்டும். பெயருக்கும் புகழுக்கும் ஆசைப்பட்டுத் தான தர்மங்கள் செய்வதைவிட, பணக்காரர்கள் தங்கள் ஏழைபந்துக்களின் விவாகத்துக்குத் தாராளமான திரவிய உதவி தர வேண்டும். உரிய காலத்தில் தம் பெண்குழந்தைகளுக்குக் கல்யாணமாகி ஸ்திரீ தர்மமும் சமூக தர்மமும் கெடாமலிருக்க வேண்டும் என்பது என் ஆசை.

ஸ்திரீகள்தான் தர்மத்தை வளர்க்கிற தீபங்களாக இருக்கிறவர்கள். அவர்களின் பண்பு கெடுகிறதற்கு இடம் தரக்கூடாது. அப்புறம் தேசம் பிழைக்காது. குலஸ்திரீகளின் சித்தம் கெட்டுப் போய் விட்டதானால் அப்புறம் தருமமே போய்விடும், தேசமே போய்விடும் என்றுதான் அர்ஜுனன் கூட பகவானிடம் அழுதான். நம் ஸ்திரீ தர்மத்தைக் காப்பாற்றுகின்ற பெரிய கடமையில் நாம் தவறிவிடக் கூடாது. பெண்கள் உரிய காலத்தில் கல்யாணமாகி கிரஹலக்ஷ்மிகளாக இருக்க வேண்டியது சமூக க்ஷேமத்துக்கு ரொம்பவும் அவசியம். இதற்கு ஒரு பெரிய முட்டுக்கட்டையாக இருக்கிற வரதக்ஷிணை வழக்கத்தை நாம் கைவிட்டாக வேண்டும்.

**தெய்வத்தின் குரலில் இருந்து**
**ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி**
**பீடாதீஸ்வர ஸ்ரீ சந்திர சேகரேந்திர**
**சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்**

# ஓ மனிதா !

**"மனம் ஓர் குரங்குஅதனை அடக்கி ஆளுவது தான் இந்த அறிவு"**

## அறிவுடையார் யார்?!

அஞ்சவேண்டியவற்றுக்கெல்லாம், அஞ்சி நடப்பவர்கள் யார்? இவர்கள் தான் அறிவுள்ளவர்கள் என்று போற்றப்பட்டுப் புகழப்படுகின்றனர். அதற்காக எல்லோரும் இந்த அறிவை நல் அறிவை போற்றுகின்றார்கள். **ஏன் அறிவற்ற தன்மையை வெறுக்கின்றார்கள்? இதனால் ஏற்படுவது என்ன?**

**ஆபத்துக்கள், சங்கடங்கள், சச்சரவுகள், சந்தேகங்கள், மற்றும் நம்பிக்கை இன்மையும் ................ இத்தகைய அறிவற்ற தன்மையை யார் தான் விரும்புவார்கள்.**

**மனம் சென்றபடியெல்லாம் உடலை செல்ல விடாமல் காப்பது இந்த அறிவுதான். இந்த அறிவு மட்டும் இல்லை என்றால் மனம் போன போக்கில் இந்த உடலும் சென்று சமூகத்தில் பெரிய அவப்பெயரை பெற்றுவிடும். மனம் ஆயிரம் எண்ணத்தான் செய்யும், மனம் எண்ணிய எல்லாவற்றையும் உடன் செய்ய நினைத்தால்? செய்ய**

**முயன்றால் என்னாவது? இப்படி செய்யக்கூடாது, அப்படி செய்யக்கூடாது என்று தூண்டுவது அறிவுதானே. அவ்வாறே எண்ணங்களை அலசி ஆராய்ந்து எது? எதற்கு?** முக்கியம் கொடுக்க வேண்டுமோ, அதற்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து மற்றவற்றை எல்லாம் ஒதுக்கி விடுபவர்களே இந்த உலகத்தினால் போற்றப்படுகின்றனர். இவையனைத்தும் செய்வது இந்த அறிவு தான்.

**"உன்னை நீயே அறிவதாயின் அது அறிவு உன்னை நீயே மறப்பதாயின் அது அழிவு"**

**கீதேகி**
**(ஜெ. பிறேம்குமார்)**

# நங்கையர் நலமுற...

இன்று நடந்து கொண்டிருக்கும் யுத்தப் பேரழிவினால் அதிகம் பாதிக்கப்படுவது எங்கள் நங்கையர் கூட்டம் தான். பெற்றோர் கண்காணிப்பில் கட்டுக்கோப்புப் பண்பாடுகள் பேணிப் பாதுகாக்கப்பட முடியாத சூழ்நிலையில் பெண்மையைப் பாதுகாத்துப் பக்குவமாக வாழ்வது எப்படி? என்ற கேள்வி பெரும்பாலும் எமது சமுதாயத்தில் அக்கறை கொண்டவர்களைத் துளைத்துக் கொண்டிருக்கிறது.



இது வேலி பயிரை மேயும் காலம். பாலுறவுப் போதைப் பொருளாகப் பெண்களை சித்தரிக்கும் விளம்பரப் பொதிகளால் பெண்மை பங்கமுற்றிருக்கின்றது. நங்கையர் நமது சமுதாயத்தின் விதை நெல்லாக ஓங்கி உயர்ந்து வளர்ந்து பழம் தரும் பெரும் விருட்சங்களாக விளங்க வேண்டியவர்கள். தெருவில் அலைந்து உலையும் விலங்குகளாக வாழமுடியாது.

தன்னில் நிலைத்து அன்பில் நிறைந்து அறிவில் உயர்ந்து விளங்கும் நங்கையரை நானிலம் போற்றும். அவர்கள் வரலாறு படைக்க வந்தவர்கள், படைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நமது நங்கையர் உணரவேண்டும்.

எச்சந்தர்ப்பத்திலும் எச்சில் படாமல் தன் நன்மையைப் புனிதப்படுத்தும் பண்பை மிகச் சிறுவயதிலேயே பெண்குழந்தைகட்குப் பெற்றோரும் உற்றோரும் ஊட்ட வேண்டும். வள்ளுவப் பெருமான் கூறிய பெண்மை நலம் இக்காலத்தும் பொருத்தமுடைத்து. தன்வயதொத்த ஆண்களை உற்ற உடன் பிறப்புக்களாக உணர்தல் அவசியம். வயது மூத்தவர்களைப் பெற்றோர், உற்றோராக ஒருமைப்பாட்டின் கண்ணின்று உணர்தல் வேண்டும்.

எவ்வேளையிலும் பெண்கள் ஆண்களின் காம உணர்ச்சியைத் தூண்டும் வகையில் உடை அணிவது சமுதாயத்துக்குச் செய்யும் பெரும் துரோகமாகும் என்பதை நங்கையர் உணர்தல் மிக அவசியமாகும். காம உணர்ச்சியை கிளறும் கவர்ச்சி உபாயங்களைத் தவிர்த்து, அன்புணர்ச்சிப் பெட்டகங்களாக இருக்க நங்கையர் பழக வேண்டும்.

பண்பாடு என்பது பழக்கத்தில் வரவேண்டும். ஊரோடு ஒத்துப் போவது பெண்மைக்குப் பங்கம் என்றால் அவற்றைத் தவிர்த்துக் கொள்ளல் அவசியம்.

அன்புணர்ச்சியைத் தூண்டும் நங்கையர் நெஞ்சில் இன்பம் நிறைந்திருக்கும். அதன் பிரதிபலிப்பு வீட்டிலும், நாட்டிலும் காணக் கூடியதாக இருக்கும். இவர்களால் உலகம் மேன்மையுறும். **"உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே"** என்கிறார் சங்கச்சான்றோர். நங்கையர் நலமுற உலகம் நலமுறும் **"யாதும் ஊரே யாவரும் கேளிர்"** என்பது சங்கச் சான்றோர் தந்த வாழ்க்கை முறை. இவற்றைப் பேணிக்காத்தல் நங்கையர் நலமுற உதவுவதாகும். **(தொடரும்.........)**


*திருமதி. செல்வம் கல்யாணசுந்தரம்*



# இந்துவின் மரணமும் ! பெரும் செலவும் !

மரணவீட்டில் நடந்த கிரியைகளைக் கருத்தில் கொண்டு தந்தையிடம் மகன் கேள்வியைக் கேட்கின்றான். தந்தைக்கும் கிரியைகள் என் செய்ய வேண்டும், எதற்காகச் செய்யப்பட வேண்டும்? மகன் சொல்வது போல், இவை ஒன்றும் செய்யத்தேவையில்லை என்று யோசிக்கின்றார். பற்பல கேள்விகளும் அவருக்குள் எழுகின்றது. அச்சமயம் அவர்களிடம் ***இராமநாதன் சத்திய மூர்த்தி குருக்கள் (கொட்டகலை மகாவிஷ்ணு ஜோதி ஆலய சிவாச்சாரியார்)*** வருகின்றார். அவரிடம் இந்தக் கேள்விகள் கேட்கப்படுகின்றன. அதற்கு அவர் விரிவாகவும் விளக்கமாகவும் பதில் அளிக்கிறார்.

ஒரு மரணவீட்டிற்கு ஆச்சாரியாரை அழைத்துத்தான் கிரியைகள் செய்யப்படல் வேண்டும். ஏன் எனில் இறந்தவருடைய ஆத்மா அங்கேயே உலாவிக்கொண்டிருக்கும். முறைப்படி கிரியைகளைக் கற்ற ஆச்சாரியார் வந்து மந்திரங்களை உச்சரித்து முறைப்படி கிரியைகளைச் செய்கிறார். இவ்வாறு செய்வதனால் அந்த ஆத்மா திருப்தி அடைகின்றது. பின்னர் அது அவ்விடத்தை விட்டு நீங்குகின்றது. உதாரணமாக ஒருவர் இறந்தால் அவரை முதலில் வாயையும் பெருவிரல் இரண்டையும் கட்டி தெற்கு நோக்கி வெள்ளைத் துணியில் கிடக்க வைக்க வேண்டும். மேலும் வெள்ளைத்துணி விரிக்க வேண்டும். பின்னர் காதில் மூக்கில் பஞ்சு அடைதல் வேண்டும். ஒரு பிள்ளையின் பெற்றோர் இறந்தால் அந்த நேரத்தில் பிள்ளை தன் தொடையில் பெற்றோரை வைத்து இராம நாமம் அல்லது சிவாய நாமம் அல்லது பஞ்சாட்சர மந்திரம் காதில் சொல்ல வேண்டுமாம். அவ்வாறு சொல்லி வாயில் பாலை ஊற்றினால் அந்தப்பால் அபான வாயுவால் உறிஞ்சப்பட்டு வயிற்றைச் சென்றடையும். அதனால் ஆத்மா இலகுவாகப் பிரிந்துவிடும் என்று கூறப்படுகிறது. ஆனால் சிலருக்கு இவ்வாறான முறைகள் தெரியாது. அதனால் அவர்கள் ஆச்சாரியாரை அழைக்காமல், கிரியைகள் செய்யாமல் தங்கள் பாட்டிற்கு ஏதோ செய்து தகனம் செய்வார்கள். இதனால் தான் அவர்கள் மனநிம்மதியற்ற நிலையையும், பலவிதமான இன்னல்களையும் அனுபவிக்கின்றார்கள். ஆகவே முறைப்படி கிரியைகள் செய்தால் இவ்வாறான இன்னல் களை அனுபவிக்கத் தேவையில்லை என்று சொன்னார்.



குறிப்பாக இந்துவின் மரண வீட்டில் கிரியைகள் ஒருபக்கம் நடைபெறும் மறுபக்கம் சிலர் கதைத்துக் கொண்டிருப்பார்கள். சிரார்த்தம் என்பது சிரத்தையுடன் செய்யப்படல் வேண்டும். பெற்றோர் இறந்தால் பிள்ளைகள் அதில் கண்ணும் கருத்தாகத்தான் இருப்பார்கள். ஏனெனில் அவர்கள் துக்கத்தில் காணப்படுவர். நெருங்கிய உறவினரும் அதில் ஈடுபாடு உடையவர்களாக இருப்பார்கள். சிலர் பார்த்துக் கொண்டிப்பவர்கள் அசட்டையாக இருப்பார்கள். அது ஒவ்வொருவருடைய மனநிலையைப் பொறுத்தது. முறைப்படி அந்த ஆத்மா சாந்தியடைய வேண்டு மானால் எல்லோரும் பிரார்த்திப்பது தான் அவர்களுடைய முக்கிய கடமை ஆகும் என்றார்.

மரணவீட்டில் பேரிகை அடித்தல், சுண்ணம் இடித்தல் என்பது முக்கியமானது. ஆனால் 21ம் நூற்றாண்டு காலகட்டத்தில் இவை அருகிக் கொண்டே போகின்றன. பேரிகை அடிப்பதன் நோக்கம் என்னவென்றால், ஆசாரியார் புண்ணிய யாகம் செய்து அந்த நீரினால் இடத்தையும் பொருளையும் சுத்திபண்ணி, ஆசமன சகளிகரணம் செய்து பேரிகையடிப்பர். இது அடிக்கும் போது "பூமி மறு உலகங்களிலும் உள்ளவர்கள் யாவரும் வாழவும் கொடியோர் அடங்கவும் அப்போது பேரிகையடிக்கின்றனர். சகல வேதங்களிலும் ஐசுவரியம் உண்டாவதாக மிருக, பட்சி முதலிய பிராணிகளுக்குஞ் சுகம் உண்டாவதாக உமாதேவியாருடைய கட்டளைப்படி பேரிகை அடிக்கிறேன். சிவபெருமான் இரட்சிக்க" என்று பறை சாற்றுவதாக இதனை அடிக்கிறார்கள்.

கன்னணம் என்? இடிக்கப்படுகின்றது என்றால் அதற்குள் மஞ்சட்பொடியை இட்டு எண்பத்தொரு பதங்களையும் தியானித்து அதை இடிப்பார்கள். தனு, கரணம், புவனம், போகம், எல்லாவற்றையும் இடித்து நொருக்கி இல்லாமல் செய்தல் என்பதற்காக இதை இடிக்கிறார்கள். அத்துடன் திருப்பொற்சுண்ணப்பதிகமும் பாடப்படும். அதாவது இறந்தவருடைய தேகத் தொடர்பு நீக்கப்பட அவர் சிவலோகஞ்சேரத்தகுதியாகிறார். அப்படி அவர் சிவலோகம் சேரும் பட்சத்தில் அவருக்கு அங்கு வரவேற்பு நிகழும். அந்நிகழ்ச்சியைப் பிரதிபலிக்கும் ஓசைப் பொலிவும், பொருள் விளக்கமும் இந்தப்பாடலில் உண்டு. அதனால் தான் சுண்ணம் இடிக்கும் போது இந்தப் பாடலைப் படிக்கின்றார்கள் என்று விளக்கம் அளித்தார்.

(தொடரும்.........)

G. சுமதி

(சனாதன தர்ம கழகம்)

## வாழ்வில் உயர்வு பெற மனோவசியக் கலை!

மகாத்மாகாந்தி, ரவீந்திர நாத்தாகூர், சுவாமி விவேகானந்தர், பகவான் அரவிந்தர், ஆபிரகாம் லிங்கன் போன்றோர் தாம் பெற்ற மானிட வசியச் சக்தியால் அளப்பரிய தொண்டை சமுதாயத்திற்குச் செய்தார்கள். இக்கலையை விருத்தி செய்வதில் முதலில் தான் தன்னில் நம்பிக்கை வளர்க்க வேண்டும். தன்னம்பிக்கை இல்லா விடில் பிறர் நம்பிக்கையையும் பெற முடியாது.

பூவின் மலர்ச்சியில் நாம் மயங்குவது போல் எங்கள் காந்த சக்தி மலர்ச்சி கண்டு மக்கள் எம்வசப்பட வேண்டும். இப்பரந்த உலகில் மக்கள் தத்தம் குற்றங்களை மிகைப்படுத்தியும் வேடதாரிகளாக வாழ்கிறார்கள். நாம் அப்படி வாழ முற்படக்கூடாது.

எம்மில் காணப்படும் குறைகளை ஓர்தாளில் பெரிய எழுத்தில் எழுதி மேலே தொங்கவிட வேண்டும்.

உதாரணமாக:

நான் கோபம் கொள்பவன்,
நான் பொய் பேசுபவன்.
நான் தற்புகழ்ச்சி உள்ளவன்

இவ்விதமான குணங்களை எழுதி வைத்து ஒவ்வொரு குறையாக நீக்க முயல வேண்டும். நாட்கள் பல கடந்தாலும் அக்குறை நிச்சயமாக உங்களை விட்டு விலகிவிடும். இதன் பின் நீங்கள் புதுமனிதராக தன்னைத்தான் ஆளும் தன்னாட்சி உள்ளவராக விளங்குவீர்கள்.

இனி முடியாது என்ற வார்த்தைக்கே உங்கள் அகராதியில் இடமில்லை. இப்பொழுது புன்னகை பூக்கும் புது மனிதர் நீங்கள். இனி இக்கலையில் தீர்த்த குரலும் தெளிவு பார்வையும் வேண்டும்.

(தொடரும்.......)

சக்தி தியாகராஜா



## ஒவ்வொரு இந்துவும் அறிந்திருக்க வேண்டிய கதிர்காம ஆலய வரலாறு

கோசோபுரி சுவாமி கொழும்பிற்குச் சென்று சேர் பொன்னம்பலம் அருணச்சலம் அவர்களைச் சந்தித்து ஆலயத்தின் அனைத்து சொத்துக்களுக்கும் சட்ட நகல் ஒன்றை உருவாக்கி 1898ம் ஆண்டு சமாதி அடைந்தார்.

கோசோபுரியின் மறைவிற்குப் பின்னர் சுவாமி அவரானபுரியும் அவரைத் தொடர்ந்து சுவாமி நாராயணபுரியும் பின்பு சுவாமி இரத்தினபுரியும் அவரைத் தொடர்ந்து சுவாமி சுகதேபுரியும் அதன் பின்பு 1922 முதல் 1939 வரை சுவாமி சுகிர்தபுரியும் மடாதிபதிகளாக இருந்தனர். சுவாமி சுகிர்தபுரியின் சீடராக இருந்த கணேஸ்புரி 1948 வரை மடாதிபதியாக இருந்தார். சுவாமி இராம்கிரி கதிர்காமம் மட்டுமன்றி இராமேஸ்வரம் கோஸ்லவிராமி மடத்திற்கும் தஞ்சாவூர் நாடியம் மடத்திற்கும் மடாதிபதியாக இருந்தார். சுவாமி இராம்கிரியைத் தொடர்ந்து சுவாமி தத்தாம்கிரி மடாதிபதியானார். சுவாமி தத்தாம் கிரி அவர்களின் காலத்தில் தீய சக்திகள் கோயிலை அபகரிப்பதற்கு முயற்சித்தனர்.

எனினும் அவரின் தவமும், மனோவலிமையும் இதற்கு இடம் கொடுக்கவில்லை. இன்று கதிர்காம புனிதஸ்தலம் இந்துக்களின் வசம் இருப்பதென்றால் அதற்குக் காரணம் சுவாமி தத்தாராம்கிரி ஆவார். சுவாமி தத்தாராம் கிரியின் காலத்தில் விஷ்வ இந்துப் பரிஷத்தைச் சேர்ந்த சுவாமி தெய்வயானந்தா மடாதிபதியாக இருந்தார். சுவாமி தத்தாராம்கிரி அவர்கள் 1998ம் ஆண்டு மறைவின் பின்னர் சுவாமி பூரணானந்தகிரி தற்போது ஆலயத்தின் மடாதிபதியாக விளங்குகிறார். கதிர்காம வரலாற்றின் சுருக்க வரலாற்றை வாசகர்களுக்குத் தந்தோம். இவ்வாலயத்தின் பூரண வரலாறும் அறிய விரும்புவர்கள் திருமதி செல்வம் கல்யாண சுந்தரம் எழுதியுள்ள **A Short History of kataragama and Theivanaiamman Thevaasthanam** என்ற ஆங்கில நூலிலும் **Call of the Mystic Shrine** என்ற நூலிலும் கதிர்காம ஆலயத்தின் அனைத்து வரலாற்றுச் சான்றுகளையும் ஆர்வலர்கள் பெற்றுக் கொள்ளலாம்.

**ஆராய்ச்சிக்குழு**

**சனாதன தர்மக்கழகம்**

## அதிகாலையில் ஏன் எழும்ப வேண்டும்

**கேள்வி:** (1) நவீன வாழ்க்கை முறைப்படி அவரவர் அலுவல்களில் பெரும் பகுதியை இரவில் தான் செய்து முடிக்க இயலுகிறது. ஆகையால் அதிகாலையில் துயில் எழுந்திருக்கச் சாத்தியப்படுவது இல்லை. சூழ்நிலையை அனுசரித்து உழைப்பாளி பிந்தி எழுந்திருப்பது பொருந்துமல்லவா?

பண்டைக்காலத்து வாழ்க்கை முறைக்கும் நவீன வாழ்க்கை முறைக்கும் வேற்றுமை இருப்பது வாஸ்தவம். பண்டைக்கால மனிதன் பொழுது படிந்தபிறகு பல அலுவல்களை நிறுத்திவைக்க வேண்டிய தாயிற்று. வீதி முழுவதற்கும் நல்ல வெளிச்சம் கொடுக்க அக்காலத்தில் தீப வசதி போதவில்லை, வீட்டுக் குள்ளேயும் தம் விருப்பம் போன்று விளக்கேற்றி வைக்க அக்காலத்து மக்களுக்கு இயலவில்லை. வெளிச்சக் குறைவு பலவிதமான வேலைகளுக்கு இடைஞ்சலாயிருந்தது. இன்றைக்கோ நிலைமை வேறு. ஊர் முழுவதையும் மின் விளக்கானது பகல் போன்று செய்துவைத்து விடுகிறது. பகலில் சூரிய வெப்பத்தின் கொடுமையுண்டு. இரவில் அது கிடையாது. ஆகவே பல

அலுவல்களைப் பகலைவிட இரவில் நன்கு கவனிக்கலாம். தொழிற்சாலைகளில் பொருட்களை உண்டு பண்ணுதல், சமாசாரப் பத்திரிகைகள் அடிப்பது, ரணவைத்தியம் செய்வது இவை போன்ற பல அலுவல்களை இரவில் நன்று செய்து முடிக்கலாம். ஆகவே நவீன வாழ்க்கை முறையில் ஈடுபட்டிருப்பவர்கள் இரவில் படுக்கப்போக நெடுநேரம் ஆகிவிடுகிறது. என்பது நாம் கண்டுவரும் காட்சியாகும். அத்தகையவர் அதிகாலையில் எழுந்திருக்க இயலாது போய்விடும் என்பது உண்மை.

இது சம்பந்தமாக இரண்டு பெருமைகளை நாம் ஞாபகத்துக்குக் கொண்டுவரவேண்டும். மனிதன் நல்ல உழைப்பாளியாக வேண்டும் என்பது ஒன்று. உழைப்பே மனிதனுக்கு ஆக்கத்தை உண்டு பண்ணுகிறது. முறையாக உழைக்கின்ற மனிதன் முன்னேற்றம் அடைகின்றான். முறை தவறி உழைக்கின்றவனே சிறிது சிறிதாக தற்கொலை செய்துகொள்கிறான். அத்தகையவனுக்கு மனவமைதியில்லை; உடல் திட்பம் தேய்கிறது. மக்களோடு நல்லிணக்கம் பண்ண அவனுக்கு அவகாசமில்லை. பணம் தேடும் யந்திரமாக அவன் ஆய்விடுகிறான். அவன் வாழ்க்கை பயனை அறியாத உழைப்பாளியாகிறான். இரண்டாவதாக இராக்காலத்தை ஓய்வுக்கும் உறக்கத்துக்குமாகப் பயன்படுத்துவதுதான் இயற்கையளித்துள்ள வசதி. இரவில் தூக்கத்தைக் குறைத்துப் பகலில் அதிகம் தூங்குவான் ஆரோக்கியத்தை இழந்து விடுகிறான். அறிவு வளர்ச்சி அத்தகையவனுக்குத் தடைப்படுகின்றது. அதிகாலையில் நான்கு மணிக்கு பிரம்ம முகூர்த்தம் எனப்படுகிறது. அப்பொழுது ஆத்ம சாதனம் செய்பவர்கள் மனத்தெளிவு பெறுகின்றனர். மனிதனுக்கு ஏற்பட்டுள்ள அலுவல்களில் மிக முக்கியமானது கற்றோனாதல். அதற்கேற்ற சாதனங்களைச் செய்தற்கு முற்றிலும் பொருந்திய நேரம் அதி காலையாகும். ஆக, அதிகாலையில் படுக்கையை விட்டு எழுந்திருக்க மனிதன் கடமைப்பட்டிருக்கின்றான். நோயாளி ஒருவனே இவ்விதத்திற்கு விலக்காகின்றான். அதிகாலையில் தெளிந்த மனதுடன் எழுந்திருத்தற்பொருட்டு முன்னிரவில் மனிதன் படுத்துறங்குதல் நன்று. முன்னிரவில் தூங்குகின்ற தூக்கமே பின்னிரவில் தூங்குவைதவிட அதிகம் ஓய்வு தரக்கூடியது. ஆகவே சுமார் பத்து மணிக்குப் படுக்கச்சென்று காலையில் நான்கு அல்லது ஐந்து மணிக்குள் எழுந்திருப்பது இயற்கைத்தாய் அளிக்கும் வசதிகளை நன்கு பயன்படுத்துவதாகும். அதிகாலையில் எழுந்திருக்கும் பழக்கம் எல்லாவிதமான முன்னேற்றத்திற்கும் துணைபுரியும். காலை வேளையில் தூங்கிக் கொண்டிருப்பவனுக்கு தமோகுண வளர்ச்சி அதிகரிக்கும். அவனுடைய அறிவு வளர்ச்சி தடைப்படும்.

ஒரு மனிதன் ஒரு மாதம் அதிகாலையில் எழுந்திருந்து நல்ல அனுஷ்டானங்கள் செய்து பார்க்க வேண்டும். இன்னுமொரு மாதம் காலையில் தூங்கியிருந்து தன் உள்ளத்தில் வடிவெடுக்கும் பாங்குகளை ஆராய்ந்து பார்க்க வேண்டும். இப்படிச் சீர்தூக்கிப் பார்த்தால் அதிகாலையில் துயில் எழுதலில் உண்டாகும் சிறப்பு தனக்கே விளங்கும். சூழ்நிலை எதுவாயினும் அதை நல்வாழ்விற்கு உரியதாக அமைத்துக்கொள்ளுதலே சான்றோரது இயல்பாகும். அதிகாலையில் எழுந்திருத்தல் என்னும் நல்வாழ்வுத்திட்டத்தை எத்தகைய சூழ்நிலையிலும் மறிகொடுத்துவிடலாகாது. பகலிலும் இரவிலும் செய்கிற எல்லாத் தொழில்களும் நல்வாழ்விற்கு உற்ற துணையாக வேண்டும். யாண்டும் வைகறையாமம் துயில் எழுந்திருந்து தெய்வம் தொழுதல் வேண்டும்.



# இசை

ஒரு நாட்டின் பண்பாட்டைக் காட்டுவது அந்நாட்டின் நுண்கலைகளிலேயே தங்கியுள்ளது; கலை வளம் திகழாத எந்நாடும் மற்றைய வளங்கள் இருப்பினும் சுபீட்சமாக இருக்கமுடியாது. இதுவே பல அறிஞர்கள் கண்ட உண்மை. இக்கலைகளுள் முதன்மையானது இசை. இசையினால்தான் அகிம்சா தர்மம், சமாதானம், சாந்திநிலை சமயம் போன்ற யாவும் ஒருங்கே வளர முடியும். இசையினை சகல ஜீவராசிகளுமே கேட்டு இன்பம் அடைகின்றன. இசைகேட்டு உருகாதார் உலகில் இருப்பினும் அவர்கள் வெறும் நடமாடும் உருவங்களேயன்றி ஆத்மீகதர்மத்தின்படி பகுத்தறிவாளராகக் கருதப்படமாட்டார்கள். பண்டைத் தமிழ் நாட்டின் மூதாதையர்கள் இசைக்கலையைத் தம்முயிரிலும் மேலாகப் போற்றி சுப அசுப கருமங்களிலும் தேவாலயங்களிலும் விதிமுறைக்கேற்ப முதலிடம் கொடுத்தனர். இசைக்கும் யோகப்பியாசம் போன்ற சுவாசப்பயிற்சிக்கும் நெருங்கிய இணைப்பு இருப்பதைக் காணலாம். நாத அலைகள் நீளவும் குறுகவும் உதிரவும் தாவும் சாரீரத்தில் பல நாட்கள் அப்பியாசம் செய்தபின்தான் சுலபமாக நினைத்தபடி இராகங்களை உருவாக்கலாம். இசை மூன்று பிரிவுகளை உடையது. அவையாவன; கீதம், வாத்தியம், நிர்த்தியம் என்பனவாகும். இவை மூன்றும் ஏகோபித்தநிலையில்தான் இசை பூரண சோபை அடைகின்றது.

இசையின் ஸ்வர நிலைகளின் இடைகளை அலையலையாகவும் அணுவணுவாகவும் கணக்கிட்டு வைத்திருக்கும் பெருமை இசை வல்லுநர்களுக்கே உண்டு. தற்காலத்தில் அணுவாராட்சி நடக்கிறதென பெருமிதம் கொள்ளும் இன்றைய உலகில் இன்றைக்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அணுவாராய்ச்சி இசைமேதைகளால் நடாத்தப்பட்டிருப்பதை அறியும் நாம் எவ்வளவு பெருமிதம் அடைய வேண்டும். மூர்த்திகளைச் செதுக்கும் சிற்பிகள் ஆத்மார்த்தம் பரார்த்தம் என்று தனித்தனியாக உருவாக்குகின்றார்கள். ஆத்மார்த்தம் என்பது தனது ஆத்மாவிற்காக என்று பொருள். பரார்த்தம் என்பது பிறருக்காக என்பது பொருள். ஆனால் இசையானது இரண்டினையும் ஒருங்கே கொண்டுள்ளது. பாடகன் பாடும் போது அவர் ஆத்மாவும் பிறர் ஆத்மாவும் ஒரே நேரத்தில் ஆனந்தம் அடைவதை நாம் காணலாம். நாதத்தைச் சாதஸ் மரணை செய்பவன் இறைவனையே சதா நினைப்பவன் எனலாம். "இறைவனை இசையால் வழிபடுங்கள்", "அன்பே இறைவன்" என்பது முதுமொழி.

அன்பு பெருகி இதயம் எல்லாம் நெகிழப்பாடும் இசைக்கு இறைவன் மிகவும் சமீபம். இசைத்தளைகளால் தான் இறைவனைக்காட்டமுடியும். இவ்வுண்மைகளை எமது புராணங்களே எடுத்துக்காட்டுகின்றன. அந்நாட்களில் அரசர்கள் கூட இசை விற்பன்னர்களாக நீதிவழுவா நெறி முறையில் பிரஜைகளைக் காத்து வந்தனர். இறைவனும் இவர்களுக்கு மந்திரி போல் ஆங்காங்கு நீதிகளைக்கற்பித்துள்ளார் என்ற வரலாறும் பல உண்டு. "அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த மூர்த்தியாகி" என்ற பாடலில் நாதம் படிப்படியாக உள்ளது என்றும் அதன் முடிவே இறைவன் என்றும் சொல்லலாம் என்று சொல்லிவிட்டார் தாயுமானவர். இவ்வுண்மையை அருணகிரியாரும் திருப்புகளில் "நாதவிந்து கலாதீத நமோ நம" என்றார். இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழும் இசையையே நடுநாயகமாக கொண்டுள்ளது. இயல் இசையில்லாது சோபிக்காது. இயலும், இசையும் இல்லாது நாடகம் சோபிக்காது. எனவே இசைதான் பெரிதும் வேண்டற்பாலது. இறைவனை காண்பதற்கு வழிகாட்டியாக உள்ளது இசையே.

**செல்வி ஹம்ஸா தேவதாசன்**
**(சனாதன தர்ம கழகம்.**
**சென்னை பல்கலைக்கழகம்)**

# இக்கால இளைஞர்களுக்கு இன்றியமையாததாகத் தேவைப்படுவது திருமந்திரம்

திருமூலநாயனார் அருளிய திருமந்திரம் இக்கால இளைஞர் யுவதிகட்கு இன்றியமையாததாக அமைந்துள்ளது. திருமூலர், ஆதிகுரு நந்திரிஷியின் எட்டுச் சீடர்களில் ஒருவர். மிகுதி எழுவரும் முறையே சனகர், சனாதனர், சனந்தனர், சனத்குமாரர், வியாக்கிரமர், பதஞ்சலி, சிவயோக மாமுனி என்போராவர். நந்திரிஷியின் எட்டுச் சீடர்களும் பாரத தேசத்தின் எட்டுத் திசைகட்கும் ஞானம் பரப்ப அனுப்பப்பட்டனர்.

**"மூலன் உரைத்த மூவாயிரம் தமிழ்**
**ஞாலம் அறியவே நந்தி அருளது**
**காலை எழுந்து கருத்தறிந்து ஓதிடில்**
**ஞாலத் தலைவனை நண்ணுவர் அன்றே"**

(திருமந்திரம்)

திருமந்திரம் இக்கால இளைஞர் யுவதிகளுக்கு ஒரு வழிகாட்டியாக விளங்குகின்றது. மூவாயிரம் பாடல்களைக் கொண்ட இத்திருமந்திரம் வாழ்க்கைப் படியில் எல்லா நிலைகளிலும் உள்ள மக்களுக்கும் உதவமுனைகின்றது. இன்பத்தைத் தேடி அலைந்து மனிதன் துன்பத்துள் வீழ்ந்து மடிகின்றான். இப்பரிதாபநிலை மாறத்திருமந்திரம் உதவுகிறது.

**நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்**
**வான் பற்றி நின்ற மறை பொருள் சொல்கிடில்**
**ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்**
**தான் பற்றப் பற்றத் தலைப்படும் தானே"**

(திருமந்திரம்)

இந்த ஒரு பாட்டிலேயே உண்மையான இன்பத்தைப் பெறும் இரகசியத்தைப் பற்றி எடுத்த எடுப்பிலேயே திருமந்திரம் கூறுகின்றது. தர்ம, அதர்ம, தாம, மோட்சத்தை அடையும் படிகளைத் திருமந்திரம் இன்றே, இங்கே இப்பொழுதே அடையும் மார்க்கத்தைத் தெட்டத் தெளிவாகக் காட்டுகின்றது. தொலைக்காட்சி, படக்காட்சி, தெருவில் பெண்களின் படக்காட்சி, உடற்காட்சி முதலியவற்றால் மன உளைச்சலுற்றுப் பல வீனமடையும் மனதைச் செம்மைப் படுத்தி, ஒருமைப்படுத்திப் பல மேற்றும் இரகசியப் பாதையைக் காட்டுகின்றது திருமந்திரம். திருமந்திரம் பல விஞ்ஞான விதி முறைகளை உள்ளடக்கியுள்ளது. இவற்றை அறிவதற்கு வாருங்கள் பிரதி சனிவாரம் மாலை 5.30 மணிக்கு இலக்கம் 3, நிட்ஜ்வேபிளேஸ் கொழும்பு - 04.

**(தொடரும்)**

## திருக்கோணமலை சிவானந்த தபோவனம் ; தோற்ற வரலாறு

1964ம் ஆண்டு அழிவிற்குட்பட்ட ஸ்தாபனம் புத்துயிர் பெற்றது. மீண்டும் சோலையாக இல்லம் வளரத்தொடங்கியது. பறவைகளினது ஓசை ரீங்காரம் செய்த வண்ணம் இருந்தன. அக்காலப்பகுதியில் தான் இருண்ட மேகம் உப்பு வெளியை நோக்கி நகர்ந்தது. 1978ம் ஆண்டு சித்திரை மாதம் முதலாம் திகதி வணக்கத்துக்குரிய மாதாஜி அவர்கள் மகா சமாதி அடைந்தார்.

சிவானந்த தபோவனக் குழந்தைகளும் திருகோணமலை நகரமும் அதிர்ச்சியில் சோகத்தில் ஆழ்ந்தது. ஸ்தாபனத்தின் எதிர்காலம் பெருங் கேள்விக் குறியாகி விட்டதோ எனப் பலர் சிந்திக்கையில், வன மாதாஜியினால் தெரிவு செய்யப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் தங்களது ஆற்றலுக்கு ஏற்ப ஆஸ்ரமத்தை வழி



# காரைக்கால் அம்மையார்

இவர் காரைக்கால் என்னும் ஊரிலே வணிகர் குலத்திலே தனதத்தன் என்பவருக்கு, மகளாகப் பிறந்தார். அப்பொழுது இவருக்குப் புனிதவதியார் என்று பெயர். தனக்கு வயதடைந்ததும் இவரது தந்தை இவரை நாகபட்டினத்திலே வணிகர் குலத்திலே இருந்த பரமதத்தன் என்பவருக்குத் திருமணம் செய்து கொடுத்தார்.

இவரது இல்வாழ்க்கை இனிதாக நடந்து வந்தது. இவர் மிக்க சிவபக்தியுள்ளவர். இதனால் சிவனடியார்களை நன்கு உபசரித்து வந்தார். ஒருநாள் பரமதத்தன் இரு மாங்கனிகளை வீட்டுக்கு அனுப்பி வைத்தான். இதன் பின் ஒரு சிவனடியார் அங்கு சென்றார். அம்மையார் அக்கனிகளுள் ஒன்றை அவருக்குக் கொடுத்து உபசரித்தார். பரமதத்தன் வீட்டுக்கு வந்தான். அவனுக்கு அம்மையார் ஒரு மாங்கனியைக் கொடுத்தார். அது மிகவும் சுவையாக இருந்ததால் அடுத்த மாங்கனியையும் உண்பதற்குப் பரமதத்தன் விரும்பினான். அம்மையார் செய்வதறியாது வீட்டினுட் சென்று இறைவனை வேண்டினார். இறைவனது அருளால் ஒரு மாங்கனி கிடைத்தது. அதைக் கணவரிடம் கொடுத்தார்.

அக்கனி முன்னைய மாங்கனியிலும் சுவையாக இருப்பதாக பரமதத்தன் அம்மையாருக்குக் கூறினான். அம்மையார் நடந்தவைகளைக் கூறினார். அவை உண்மையாயின் இன்னுமொரு மாங்கனி இறைவனிடம் பெற்றுத்தரும்படி பரமதத்தன் கூறினான். அப்படியே இன்னுமொரு மாங்கனியை அவர் பெற்றுக் கொடுத்தார்.

இதனால் பரமதத்தன் அவரைத் தெய்வமாக எண்ணி மதுரைக்குச் சென்று வேறொரு பெண்ணை மணஞ்செய்து வாழ்ந்தான். அவனுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதற்கு அம்மையாரின் பெயரையே இட்டான். அம்மையார் அவரிடம் சென்ற போது அவரைத் தெய்வமாக மதித்துத் தன் குடும்பத்துடன் வணங்கினான்.

அதன்பின் அம்மையார் துறவியாகித் திருக்கைலைக்குச் சென்றார். இறைவன், "அம்மையே" என அழைத்து பிறவாது தம் திருவடிக்கீழ் வரத்தைக் கொடுத்தார். பின் திருவாலங்காட்டிலே தொண்டுகள் செய்து வாழ்ந்து சிவபிரான் திருவடியை அடைந்தார். இவர் அருளிய நூல்கள் அற்புதத்திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, மூத்த திருப்பதிகம், திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் என்பனவாகும்.

**செல்வி லோ.அனுஷா ஜனனி**
**சனாதன தர்ம கழகம்**

# இந்து இலக்கியங்கள்

**உபநிடதங்கள்**

வேதங்களைப்பற்றி முன்னைய கட்டுரையில் குறிப்பிட்டோம். இனி வேதங்களின் இறுதிப்பாகங்களான உபநிடதங்களைப்பற்றிச் சற்று நோக்குவோம்.

உபநிடதங்கள் வேதங்களின் முடிவாகும். அவைகளை அடிப்படையாகக் கொண்ட போதனையே வேதம் எனப்படும். உபநிடதங்கள் வேதங்களின் சாரமாகும். வேதங்களின் இலக் காகும். அவை இந்துமதத்தின் அத்திவாரமாக அமைந்துள்ளன.

ஒவ்வொரு வேதத்திற்கும் எவ்வளவு சாகைகள் அல்லது கிளைகள் (உப பிரிவுகள்) உள்ளனவோ அவ்வளவு உபநிடதங்கள் உள்ளன. அதாவது நான்கு வேதங்களுக்கும் முறையே 21, 109, 1000, 50 உபநிடதங்கள் உள்ளன. அத்வைதம், விசிட்டாத்வைதம், துவைதம் போன்ற வெவ்வேறான இந்தியத் தத்துவஞானிகளும் உபநிடதங்களையே தம் தத்துவங்களுக்கு ஆதாரமாகக் கொள்கின்றனர். அவர்கள் சுத்த பாணியில் உரைகள் எழுதியுள்ளனர். உபநிடதங்களின் அத்திவாரத்தின் மீது அவர்களது தத்துவஞானம் எனும் கட்டிடத்தைக் கட்டியெழுப்பி உள்ளனர்.

உபநிடதங்களின் மெய்ஞ்ஞான விற்பன்னர்களுக்கு மேல்நாட்டு மேதைகளும் கூடப் புகழ் அஞ்சலி செலுத்தியுள்ளனர். ஒரு காலத்தில் மேல்நாட்டார் மரப்பட்டைகளைச் சட்டைகளாக அணிந்து கொண்டு அஞ்ஞானமாகிய இருளிலே ஆழ்ந்திருந்த பொழுது உபநிடத சன்னியாசிகள் ஆண்டவனின் அழியாப் பேரின்பத்திலே திளைத்திருந்தனர். அவர்கள் உயரிய பண்பாட்டுடனும் நாகரிகத்துடனும் விளங்கினர்.

மிக மிக முக்கியத்துவம் வாய்ந்த உபநிடதங்களாவன ஈச, கேன, கட, பிரஸ்ன, முண்டக, மாண்டுக்கிய, ஐதரேய, தைத்திரிய, சாந்தோக்கிய, பிருகதாரண்ய, கௌஷிதகி, ஸ்வேதாஸ்வர எனப்படும். இவையாவும் மேலான அதிகாரம் பெற்றவை.

உபநிடதம் என்பதனை உப+நி+ஷத எனப் பிரிக்கலாம். அதாவது குருவிற்கு மிகச் சமீபத்தில் சிரத்தையோடு இருத்தல் என்ற பொருளைத் தருகின்றது. இங்கு சீடன் எழுப்புகின்ற வினாக்களுக்கு குருவானவர் விடையளிப்பதாகவே உபநிடதக்கருத்துக்கள் காணப்படுகின்றன. இவ் உபநிடதங்கள் சாதாரண மனிதனுக்கும் உரிய இடம் கொடுக்கப்படும் உயர் சிந்தனைகளை கொண்டுள்ளன.

உபநிடதங்கள் பிரம்மம், ஆன்மா, உலகம், கன்மம், மறுபிறப்பு ஒழுக்கம், முத்தி பற்றி தெளிவாக எடுத்துக் கூறுவதில் இவை இந்துமத சிந்தனை வரலாற்றில் சிறப்பிடத்தை பெறுகின்றன. எல்லா இந்துசமய தத்துவ தரிசனங்கள் எழுவதற்கும் காரணமாயமைந்த உபநிடதங்கள் இந்துசமய சிந்தனை வரலாற்றில் எட்டிப்பிடிக்க முடியாத சிறப்பிடத்தைப் பெற்று விளங்குகின்றன.

**கிளை வேதங்கள்;**

இந்து இலக்கியங்களில் கிளை வேதங்களும் அடங்கும் நான்கு கிளை வேதங்கள் உள்ளன. இவை உப (துணை) வேதங்கள் எனப்படும். ஆயுர்வேதம், தனுர்வேதம், காந்தர்வ வேதம், அர்த்த சாஸ்திரம் ஆகியவை முறையே நான்கு வேதங்களுக்கும் துணை வேதங்களாக அமைந்துள்ளன.

(தொடரும்)

M.வாணிதாஸ்
(சனாதன தர்மகழகம்)



நடாத்திச் சென்றார்கள். காந்தி மாஸ்டர், அ.தங்கத்துரை, சந்திரகாந்தன் ஆகியோர் திருகோணமலையில் வசித்தபடி தங்கள் சக்திக்கு ஏற்ற வாறு இல்லத்தை வழிநடாத்திச் செல்லும் வேளை 1987ம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரத்தின் போது திட்டமிட்ட சில அதிகாரம் பெற்றவர்கள் ஆஸ்ரமத்தை அழித்தனர். பொருட்களைச் சூறையாடினர். 500 பனை மரங்கள், வேம்பு, தேக்கு, மாமரங்கள், பழமரங்கள் வீழ்த்தப்பட்டன. தபோவனம் காடாகியது. கதியற்ற குழந்தைகளுக்கு வாழ்வளித்த பிரதேசத்தை எரித்துச் சாம்பலாக்கினர். மீண்டும் குழந்தைகள் தெருவிலேயே தள்ளப்பட்டார்கள். இளம் நெஞ்சுகள் பதை பதைக்கத் தொடங்கியது. என்றாலும் அனைத்துக் குழந்தைகளையும் அரவணைத்துக் கொண்டு திருகோணமலை நகரில் 102 Court Road இல் தங்கவைக்கப் பட்டனர். திருகோணமலை வாழ் மக்களின் உதவியால் பிள்ளைகள் தம்வாழ்க்கையைக் கொண்டு சென்றனர்.

பலர் ஸ்தாபனத்துக்கு உதவி செய்தாலும் மிக முக்கியமாகக் குழந்தைகளுடன் வாழ்ந்து குழந்தைகளின் கஷ்ட நஷ்டங்களில் பங்கேற்றதில் திருமதி. குணவதி இராஜரட்ணமும், செல்வி ருக்மணியும் ஆச்சிரமத்துக்கு ஆற்றிய பணிகள் அளப்பரியவை. பாராட்டத் தக்கவை.

(தொடரும்)

திருமதி. செல்வம் கல்யாண சுந்தரம்.
(திவ்விய ஜீவன சங்கம்)

# குறளமுதம் — 3



சென்ற இதழில் திருவள்ளுவர் "நான் எடுத்த இப்பிறப்பின் அவதாரத்தை முடித்து விட்டேன் திருக்குறளை அரங்கேற்றுவதும், அரங்கேற்றாமல் விடுவதும் அவர்களின் கடமை" என்கிறார். அதற்கு ஔவையார் "மக்களின் நல்வாழ்வுக்காக சமைக்கப்பட்ட இந்நூல் மக்களின் கைகளுக்கு சென்றடைய வேண்டும். அப்படி திருக்குறள் சங்கத்தில் அரங்கேறா விட்டால் குறளுக்கு இழுக்கு அல்ல. தமிழுக்கு இழுக்கு. உலக மக்களுக்கு இழுக்கு" என்கிறார்.

பாண்டிய மன்னனோ "தமிழ் தெய்வங்களே தங்களுக்கு நான் என்ன செய்ய வேண்டும்" என்று முழந்தாள் இட்டு வேண்டுகின்றார். இறைவனோ "வள்ளுவர் வாக்கு என்வாக்கு வள்ளுவன் வாக்கை என்வாக்காகக் கருதுங்கள்" என்று பகர்கிறார். முடிவாய் ஔவை "ஒவ்வொரு மானிடனும் திருக்குறளை இதயத்தில் பதக்கமாக அணிந்து வாழ்வில் பயன் பெறவேண்டும்" என்று வாழ்த்தி முடிக்கின்றார்.

அடுத்து, திருக்குறள் என்ன என்பதைப் பார்ப்போம். இவ்வுலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் பிறப்பில் இருந்து இறப்புவரை எப்படி வாழ வேண்டும். எப்படி வாழ்ந்தால் இப் பிறப்பின் முழுப்பயனையும் அடைய முடியும். அப்படி வாழத் தவறின் துன்பத்திலும், தோல்விகளிலும் அகப்பட்டு இப்பிறப்பின் பயனையே முழுமையாக அடைய முடியாமல் போய்விடும் என்பதை மிகத் தெளிவாக எடுத்துரைக்கும் ஓர் வாழ்வியல் நூல் திருக்குறளாகும். இத்தனைத் திருவள்ளுவர் எந்த ஆராவாரம் இல்லாமலும் தற்புகழ் பாடாமலும், குலப் பெருமை, சேராமலும், கட்டாயப்படுத்தி நிலைநிறுத்தாமலும், மிகத்தெளிவாக

மக்களின் நல்வாழ்வையே குறிக்கோளாகக்கருதி அசக்கப்பட்ட நூலே திருக்குறளாகும்.

திருக்குறள் அறத்தைக் கருப் பொருளாக வைத்தே எழுதப்பட்டிருப்பதை அறிய முடிகிறது. ஒன்றிலிருந்து 1330 குறள்களிலும் ஏதோ ஒரு விதத்தில் அறம் இழையோடியிருப்பதை ஆழமாக ஆராயும் போது தெளிவு பெற முடியும். அறம் மட்டும் தான் இவ்வுலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் உயர் வாழ்வைப் பெற ஒரே மார்க்கம் என்பதை பல கட்டங்களில் வலியுறுத்தப்படுவதை அவதானிக்கலாம்.

**"சிறப்பு ஈனும் செல்வமும் ஈனும் அறத்தின் ஊங்கு ஆக்கம் எவனோ உயிர்க்கு"**

இக்குறளில் இவ்வுலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனுக்கும் சிறப்பான வாழ்க்கையையும், நிறைந்த செல்வத்தையும் தரக்கூடியது அறம் மட்டும் தான் என்று ஆணித்தரமாக எடுத்துக் கூறுவதுடன் அறத்தைக் கடைப்பிடிப்பதைத் தவிர வாழ்வில் சிறப்பையும் செல்வத்தையும் தருவதற்கு வேறு மார்க்கம் ஏதாவது உண்டா? என்ற கேள்வியைக் கேட்டு இக்குறளை முடித்திருப்பதை மிக ஆழமாகக் கவனிக்கத் தக்கது.

பிறிதொரு குறளில்;

**"அறத்தின் ஊங்கு ஆக்கமும் இல்லை அதனை மறத்தலின் ஊங்கு இல்லை கேடு"**

இக்குறளை சற்று விரிவாகப் பார்ப்போம். வாழ்வில் ஆக்கத்தைத் தருவதற்கு அறத்தைக் கடைப் பிடிப்பதை விட வேறுமார்க்கமும் இல்லை. அதேவேளை அறத்தை மறந்து நடப்பதினால் ஏற்படும் துன்பங்களுக்கும் தோல்விகளுக்கும் அளவே இல்லை. என்பதை மிக அழுத்தம் திருத்தமாக "ஊங்கு" என்ற சொல்லை பயன்படுத்தியதின் மூலம் அறிய முடியும்.

மற்றொரு குறளில் "ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே" என்பது முடிந்தளவு செய்யும் செயல்களில் எல்லாம் அறத்தைக் கடைப்பிடிப்பதை மறவாதே என்றும் "அன்று அறிவாம் எண்ணாது அறம் செய்க" என்ற குறளில் அறத்தைச் செய்வதற்கு "நாளை நாளை" என்று காலத்தைக் கடத்தி விடாதீர்கள். இன்றே அறத்தைச் செய்யுங்கள் என்று கூறுவதுடன்

**"வீழ்நாள் படாஅமை நன்று ஆற்றின் அஃது ஒருவன் வாழ்நாள் வழி அடைக்கும்கல்"**

அறம் செய்யாது வீணாக்கும் நாள் இல்லாதவாறு நாள்தோறும் அறத்தைச் செய்து வருவானானால் அச்செயலே அவன் இவ்வுலகில் உடம்போடு கூடி வாழும் நாளாகக் கருதப்படும் என்கிறார். இவ்வுலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் இன்பமாக வாழவே விரும்புகிறான். ஆனால் அவ் இன்பம் எல்லோருக்கும் கிடைப்பதில்லை அது ஏன்? "இங்கு அறத்தால் வருவதே இன்பம்" என்று ஒரு குறளில் அறத்தின் மகிமையை இடித்து உரைக்கின்றன. இவற்றுக்கு எல்லாம் சிகரம் வைத்தால் போல் முதலாவது அதிகாரத்தில் இறைவனை வாழ்த்தச் சென்ற வள்ளுவனால் ஓர் குறளில் இறைவனது வடிவத்தையும் அருள் சக்தியையும் அறவழி அந்தணன் என இறைவனை வியாபித்து அறத்தையே உருவமாகவும் அருள் சக்தியாகவும் கொண்டவர் என்பதை விளக்கிக் காட்ட ஒவ்வொருவராலும் ஆழமாகச் சிந்திக்கற்பாலது. இதில் இருந்து புரிவது அறத்தையே கடவுளாகக் கொண்ட இறைவன் விரும்புவது எல்லாம் அறத்தைக் கடைப்பிடிப்பவர்கள் மாட்டே.

(மறு இதழில் அறம் என்றால் என்ன என பார்ப்போம்)

**நன்றியுடன் குறளமுதம்**
**கா. விநாயகமூர்த்தி**
திருக்கோணமலை



# கம்பராமாயணத்தில் ஓர் பாத்திரம்

கூன் விழுந்த முதுகு, அழகு என்ற சொல்லிற்குப் பொருத்த மில்லாதவள்; யார் என்று தெரியும் தானே? வேறு யாருமில்லை அவர்தான் கூனி. இராமனின் கல் அவளின் முதுகின் மேல் பட்டதால் ஏற்பட்ட கோபத்தைச் சாதுரி யமாகக் கையாண்டு கைகேயி மனதை மாற்றி இராமனைக் காட்டுக்கு அனுப்பியவள். இதில்தான் நாம் பிழை செய்து விட்டோம்.

கைகேயியின் தோழியாக அவள் திருமணத்தின்போது கூட வந்தவள். இராமன் வளரும் பருவத்தில் அவனுக்குத் தீமைகள் செய்ய முடியாதா? கல்பட்டபின்தான செய்ய வேண்டுமா? கொடும் செயல்கள் செய்து விஷமத்தனமாக வார்த்தைகள் கூறித்தன் கொடிய தன்மையை பிறருக்குக் காட்டி இருக்க முடியாதா என்ன? பின் ஏன் இராமனை காட்டுக்கு அனுப்ப நேர்ந்தது என்கிறீர்களா?

தன்னிலும் அழகான பெண்ணைக் கண்டவுடன் இன்னொரு பெண்ணுக்குப் பொறாமை தோன்றும் தானே? அந்தப் பொறாமையால்தான இராமன் காட்டுக்குப் போக நேர்ந்தது. இராமன் மேல் அளவற்ற அன்புகொண்ட கூனியில் ஒரு பிழையும் இல்லை. இராமனைக் காட்டுக்கு அனுப்பிவிட்டுத் தவிக்கின்றாள். தன்செயலால் அவன் கஷ்டப்படப் போகிறானே என்று ஏங்குகிறாள். இப்படியான தன்மைகள் கொண்ட கூனி எப்படி கெட்டவளாக முடியும்?

S. சித்திரரூபி
(சனாதன தர்ம கழகம்)

# அனைத்து நோய்களுக்கும் அறுகம்புல்

புற்றுநோய், அதிக இரத்தக் கொதிப்பு, அம்மை, குடல்புண், சிறுநீரக செயலிழப்பு, இரத்தப் போக்கு, வெள்ளைப் போக்கு, தோல்நோய்கள் போன்ற பல்வேறு நோய்களை அறுகம்புல் குணப் படுத்துகிறது. புகை போன்ற சுற்றுச் சூழல் சீர்கேடுகளால் இரத்தம் அசுத்தம் அடைவதையும் அறுகம் புல் குணமாக்குகின்றது. வேர்நீக்கிய 100g அறுகம் புல்லுடன் ஐந்து மிளகு சேர்த்து 200 மில்லி நீர் விட்டு அரைத்து சாறாக்கி வடித்து காலையில் வெறும் வயிற்றில் பருகவேண்டும். இரண்டுமணி நேரத்துக்கு நீர்தவிர ஏதுவும் சாப்பிடக் கூடாது. தொடர்ந்து 40 நாட்கள் இப்படிப் பருகிவர மேற் சொன்ன நோய்கள் குணமாகும்.

நீரழிவு உள்ளோர் ஐந்து வேப்பம் கொழுந்தும் ஐந்து வில்வ இலையும் சேர்த்து அரைத்துக் கொள்ளவும். பழங்கள் பச்சைக் காய்கறிகள் அதிகம் சாப்பிட நோய்கள் விரைவில் குணமாகும். அறுகம்புல் சாறு உடம்பில் சேர்ந்துள்ள கழிவை வெளியேற்றி நோயை நீக்குகிறது. தோல் நோய் உள்ளவர்கள் அறுகம்புல்லை அரைத்து மேலே தடவி 15 நிமிடம் சென்றதும் அரப்புத்தூள் போட்டுக் கழுவிக் கொள்ளவும். அறுகம்புல் 100g உடன் ஒரு துண்டு இஞ்சி நசுக்கிப்போட்டு 200 மில்லி நீர் சேர்த்துக் கொதிக்க வைத்து வடிகட்டிக் குடிக்க மனநோய் குணமாகும். அறுகம்புல் 100g உடன் வேப்பங் கொழுந்து பூண்டுப்பல் சீரகம் மும் வகைக்கு 5 வீதம் சேர்த்து அரைத்து சாறாக்கி வடிகட்டிக் குடிக்க அம்மை நோய் குணமாகும். அம்மை நோய்பரவியுள்ள காலங் களில் குடிக்க இந்நோய் தொற்றாது. உடல் உறுப்புக்கள் பாதிப்பு அடையாமல் காக்கிறது. தினம் அறுகம்புல் கிடைக்காவிட்டால் பொடியைப் பயன்படுத்தலாம்.

**மாத்தளை மகாதேவன்**

## பதுளை ஸ்ரீ இராமகிருஷ்ண விவேகானந்த பேரவையின் பணிகளும் செயற்பாடுகளும்

ஸ்ரீ இராமகிருஷ்ண பேரவை 1997ம் வருடம் ஐப்பசி மாதம் இராமகிருஷ்ணமிசன் சுவாமி ஸ்ரீமத் ஆத்மகணானந்த மகராஜ் அவர்களின் ஆசியாலும் அருளாலும் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வமைப்பானது சுவாமி விவேகானந்தர் கூறிய தாரகமந்திரத்தினை நடைமுறைக்குக் கொண்டு வந்து செயற்படுத்துவதற்காக ஆரம்பிக்கப் பட்டது.

அதாவது திக்கற்றவர், ஏழை எளியவர், கல்வி அறிவு இல்லாத விவசாயிகள், தொழிலாளர் ஆகியோருக்கு சேவை செய்வதே எமது முக்கிய நோக்கம். இதனடிப்படையில் முதியோருக்குத் தொண்டு செய்தல் எனும் சுவாமி விவேகானந்தரின் கனவை நனவாக்கும் முயற்சியில் ஈடுபட்டது. இந்துசமய தத்துவங்களையும், விழுமியங்களையும் பாமர மக்களிடம் எடுத்துச்சொல்லும் வகையில் பல வேலைத்திட்டங்களை செயற்படுத்தி வருகின்றது. பதுளைமாவட்டத்தில் இந்துசமயப் பேருரைகள் நடத்துவதற்கு இலங்கை இந்திய இராமகிருஷ்ண மிசன் சுவாமிகளின் பாதங்கள் பதுளை மண்ணைத் தொட்டது என்று கூறிப்பெருமைப் படுத்திக் கொள்கிறது.

ஸ்ரீமத்சுவாமி ஆத்மகனானந்தர் மகராஜ், ஸ்ரீமத்சுவாமி அஜராத்மானந்தா மகராஜ், ஸ்ரீமத்சுவாமி ராஜேஸ்வரானந்த மகராஜ், ஸ்ரீமத்சுவாமி சைதன்யானந்தா மகராஜ் ஆகியோரின் இந்துசமய பேருரைகள் தோட்டங்கள் தோறும் இடம்பெற்றுள்ளன. அத்துடன் கன்னியாகுமரி விவேகானந்தர் சேத்திரத்தினைச் சேர்ந்த உயர்திரு கிருஷ்ணமூர்த்தி அவர்கள் வருகைதந்து பல்வேறு செயலமர்வுகளையும், திருவிளக்கு பூஜைக்கான பயிற்சிகளையும் தோட்டம் தோறும் நடாத்தியுள்ளார்.

இன்று பதுளை மாவட்டத்தில் அறுபதிற்கு மேற்பட்ட அறநெறிப் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்குப் பயிற்சி அளித்துள்ளது. அத்துடன் பேரவையினால் 3000 - 4000 வரையான "திருவிளக்கு வழிபாடு" பூஜைப்பக்தர்கள் உருவாக்கப் பட்டுள்ளனர். ஒவ்வொரு பௌர்ணமி தினத்தன்று "திருவிளக்கு வழிபாடு" பூஜை தோட்டங்கள் தோறும் இடம் பெறுவதற்குப் பயிற்சிகள் அளிக்கப் பட்டு வருகிறது. அத்துடன் தொண்டு புரிவதற்கான பயிற்சிகளும் வழங்கப்படுகிறது.


ஒவ்வொரு வருடமும் "திருவிளக்கு வழிபாடு" பூஜைப் பக்தர்களை அழைத்து "1008 திருவிளக்கு வழிபாடு" பூஜை, "504 திருவிளக்கு வழிபாடு" பூஜைகளைப் பசறை, பதுளை, பண்டாரவளை போன்ற இடங்களில் நடாத்தப் படுகின்றது. இதனோடு ஆன்மீகப் பேருரைகள், பஜனை, விவாத அரங்கு போன்றவை நடாத்தப்பட்டு உயர்ந்த தத்துவங்களை மக்களுக்கு அடைய வழிவகுக்கின்றது. அத்துடன் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள விவேகானந்த ஆச்சிரமத்துடன் இணைந்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான தொடக்க நிலையத்தேர்வு ஒன்றும் நடத்தப்பட்டது.

இந்துசமய புத்தக கண்காட்சிகளும் இராமகிருஷ்ண மிஷன் உதவியுடன் நடத்தப்பட்டன. படிப்படியாகத் தோட்டங்களில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. அத்துடன் பேரவையின் தொண்டர்கள் உணர்வுடனும் உற்சாகத்துடனும் பணியாற்றுகிறார்கள். பேரவையின் சமய, ஆன்மீக பணிகளை ஆற்றுவதற்கு கொழும்பு இலங்கை இந்து பேரவை, சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகம், கொட்டாஞ்சேனை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம் ஆகியவையும் உதவி புரிகின்றன.

பதுளை ஸ்ரீ இராமகிருஷ்ண
விவேகானந்த பேரவை செயற்குழு.



## கீதை மாணவர்களுக்கு ஒரு அறிமுகம் மற்றவர்க்கு ஒரு தத்துவம்



***பார்வை! நீ அதுவாக இருக்கிறாய்.***

உலகில் உள்ள சமயங்கள் போற்றும் உயர்ந்த நூல்கள் எல்லாம் பொது இயல்பு ஒன்றைக் கொண்டிருக்கின்றன. நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அவையாவும் "மகா வாக்கியத்துக்கு" விளக்கமாக வந்து அமைந்துள்ளன. மகா வாக்கியம் என்பது இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்பைச் சொல்கிறது. இந்து சமயத்தின் அடிப்படைத்தத்துவமாக வந்து அமையும் மகா வாக்கியம் "தத்துவம் அஸி" எனும் மூன்று சொற்களைக் கொண்டது.

த்வம்-நீ, தத்-அதுவாக, அஸி-இருக்கிறாய் எனபது அதன் பொருள். ஜீவாத்மாவாகிய நீ, பரமாத்வாகிய மெய்ப்பொருளில் இருந்து வேறானவன் அல்லன். அதாவது நீ அதுவாக இருக்கிறாய். என்பதுதான் அதன் அர்த்தம். அக்கோட்பாட்டை எல்லாம் இந்துமத நூல்களும் ஏதேனும் ஒரு விதத்தில் கூறுகின்றன. "நீ அதுவாக இருக்கிறாய்" எனும் அடிப்படைக் கோட்பாட்டை முழுமையாக விளக்குவதுதான் போர்க்களத்தில் பூத்த கீதை எனும் நூல்.

இந்நூல் பதினெட்டு அத்தியாயங்களைக் கொண்டது. அவற்றுள் முதல் ஆறு தத்துவங்கள் த்வம் (நீ) எனும் பதத்திற்கு இலக்காக இருக்கின்ற "மானிட தத்துவத்தினை" விரிவாக விளக்கிக் கொண்டு போகின்றன. மனிதக் குறைபாடு, அவன் அடைய வேண்டிய நிறைநிலை, அதற்காக அவன் எடுத்துக்கொள்ள வேண்டிய முயற்சி ஆகியன முதல் ஆறு அத்தியாயங்களில் அடங்கியிருக்கின்றன.

ஏழாவது அத்தியாயத்திலிருந்து பன்னிரண்டாம் அத்தியாயம் வரை உள்ள ஆறு அத்தியாயங்களும் தத்(அது) எனும் பதத்திற்கு இலக்காக இருக்கின்ற "இறைதத்துவத்தை" விளக்குகின்றன. உலகனைத்தும் அவர் எப்படியாகியிருக்கிறார், உலகங்களில் அவர் எப்படி அந்தராத்மாவாக இருக்கிறார், பின் உலகத்தைக் கடந்தவராகவும் அவர் எப்படி இருக்கின்றார். ஆகிய இவையாவும் இந்த இரண்டாம் படியில் வந்து அமைகின்றன.

இறுதி ஆறு அத்தியாயங்களில் "அஸி" (இருக்கிறாய்) எனும் சொல்லிற்கு இலக்காகியுள்ள மானிடதெய்வீக தொடர்பு விளக்கப் படுகிறது.

தொடரும்

தி. சேந்தன் (BSC, Eng, AMIE SL)

**(சனாதன தர்மகழகம்)**



# தாழ்வுமனப்பான்மையை எவ்வாறு இனங்கண்டு அகற்றுவது

தாழ்வு மனப்பான்மை என்றால் என்ன? இதனை எவ்வாறு இனங்காண்பது என்பது சிக்கலான விடையமாக இருக்கலாம். மனரீதியில் பாதிப்புக்குள்ளாக்கப்பட்டு ஏற்படும் தாக்கங்கள், ஏக்கங்கள், உடல்ரீதியில் வித்தியாசமான போக்குகளை வெளிப்படுத்துவதே தாழ்வுமனப் பான்மை ஆகும்.

இன்றைய சமுகத்தில் பாமரமக்களிடம் மட்டுமல்லாமல் நடுத்தரவர்க்கத்தினரிடமும் உயர் தொழில் புரிபவர்களிடத்திலும் தாழ்வுமனப்பான்மை வாழ்ந்து வளர்ந்து பல்வேறு ரூபங்களில் மனதில் புகுந்து ஆட்டிப்படைக் கின்றது. இது பலரின் மனத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி, செயற்பாடு களிலும் நடவடிக்கைகளிலும் தடுமாற்றத்தை ஏற்படுத்தி மனித வாழ்க்கையின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்துக்கும் தடைக்கல்லாக அமைகிறது.

காந்திஜி, நேரு, அறிஞர் அண்ணாத்துரை போன்ற பெரியார்கள் இளம்பிராயத்திலேயே தாழ்வுமனப்பான்மையை அனுபவ ரீதியாகப் பெற்று அவற்றை நீக்கி சமூகத்தில் உயர்ந்து தலைவர்களாக விளங்கினார்கள். மனித பலவீனத்தின் அறிகுறியே தாழ்வுமனப்பான்மையாகும். தாழ்வு மனப்பான்மையின் வடுவே கோழைத்தனம் ஆகும்.

எனவே தாழ்வு மனப் பான்மையை எவ்வாறு வெற்றி கொள்வது? என்ற கேள்வி உங்கள் மத்தியில் எழும். தாழ்வு மனப் பான்மையை எடுத்துக் கொண்டால் அது பல ரகங்களில் மனிதர்களிடம் இருந்து வெளிப்படுகிறது.

அவற்றின் தன்மை யினையும், இயல்புகளையும் உணர்ந்து அவற்றை நீக்குவதற்கு முயற்சி எடுப்பதன் மூலம் சுலபமாக வெற்றி கொள்ளலாம். அத்துடன் அனுபவ ரீதியாக தாழ்வு மனப்பான்மையை உணரும் போது புரியாத விடயங்களுக்கும் தெளிவு ஏற்படுவது உண்மையாகும். மனித வாழ்வில் நம்பிக்கையற்ற, உறுதியற்ற வாழ்வே தாழ்வுநிலைக்கு தள்ளு கிறது. அத்துடன் பலவீனத்தின் உறைவிடமே தாழ்வு மனப்பான்மை என்பதையும் உணரவேண்டும்.

தொடரும்

ஜெயராமன் ஸ்ரீ காந்த
(ஸ்ரீ இராமகிருஷ்ண விவேகானந்த பேரவை)
பதுளை

# பெண்கள்

சென்ற இதழில் மாதவிலக்கு பற்றிய நோய்களை வைத்தியரின் உதவியுடன் எழுதியிருந்தேன். இவ் இதழில் பெண்களுக்குப் பிரசவகாலத்தில் கொடுக்கப்பட வேண்டிய பாதுகாப்பும் வரக்கூடிய நோய்க ளையும் சிறிது கவனிப்போம். கருவுற்ற பெண்களுக்கு உணவு, சுகாதாரம் பற்றிய அறிவுரை தேவை. அப்போதுதான் கருவுறும் காலத்தில் அவள் தன் உடல் நலத்தை நன்கு பேணமுடியும். தாயின் மனநலம் உடல் நலம் களின் எதிர்கால உடல் நலமும் மகிழ்ச்சியுடன் அமைகிறது. பேறுகாலச் சுகாதாரம் நாட்டின் நலத்தையும் நாட்டின் சகிப்புச்சக்தியையும் பெருக்க எடுத்துக் கொள்ளும் எல்லா முயற்சிகளிலும் மிகவும் முக்கியமான பங்கை வகிக்கிறது. குழந்தையையும் தாயையும் நன்கு கவனித்து பாதுகாப்பது மிகவும் முக்கியம். வருமகாலச் சந்ததி தாய்மாரின் கருப்பையில் தங்கியுள்ளது. தாயாகும் பெண்களும் அவர்களைக் கவனிக்கும் பொறுப்புள்ளவர்களும் பேறுகாலத்தில் செய்ய வேண்டியவை பற்றியும், தவிர்க்க வேண்டியவை பற்றியும் அறிந்திருக்க வேண்டும். கருவுற்ற பெண்ணின் உணவு சுத்தமுள்ளதாக, ஊட்டச்சத்துள்ளதாக, எளிய, சாத்விக சார்பாக, ஜீரணம் ஆகக்கூடியதாக அளவாக இருக்க வேண்டும். பாலில் உள்ள கல்சியத்தின் காரணமாக அவள் ஒருநாளைக்கு குறைந்த அளவு ஒரு பைந்த் (Pint) பால் பருகவேண்டும்.

கருப்பையிலுள்ள சிசுவின் எலும்புகள் வளர்ச்சியடைவதற்கு கல்சியம் தேவைப்படுகிறது. சிசுவின் சிவப்பு இரத்த அணுக்களின் (ஈமோகுளோபின்) வளர்ச்சிக்காக இரும்புச்சத்துள்ள உணவுகளும் அவசியம். காய் கீரைகள், இலைகள், பசளிக் கீரைகள் ஆகியவற்றை உண்ண வேண்டும். ஏன் எனில் இவற்றில் இரும்புச்சத்து உள்ளது. கருவுற்ற பெண்ணுக்கு விற்றமின் சத்துக்கள் மிகவும் அவசியம். மிதமிஞ்சிய காரசாரம், உப்புக்கள், வாயுவையும் பித்தத்தையும் உண்டாக்கும் உணவுப்பொருட்கள் ஆகியவை தவிர்க்கப்படல் அவசியம். பின்னிரவில் விழித்திருத்தல் கூடாது. உடை சுலபமாக இருத்தல் நன்று.

அத்துடன் தாயாகப் போகும் பெண் சுறுசுறுப் பாக இருக்க வேண்டும். ஒரு இடத்தில் உட்கார்ந்திருக்கும் பழக்கங்களைத் தவிர்க்க வேண்டும். எப்போதும் இயற்கையான குழந்தைப் பிறப்பை ஊக்குவியுங்கள். கருவுற்றிருத்தல் ஆராய்ந்து அறியப்பட்ட பின் ஒரு தாய் வைத்தியரை நாடுதல் மிகவும் முக்கியமானதாகும். பிரவசம் மிகவும் பாதுகாப்பாக அமையும் என்று அவளை நம்பச் செய்ய வேண்டும். இது மிகவும் முக்கியமானதாகும். ஒழுங்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டால் கால்கள் வீங்குதல் முதலிய சிறுசிறு அடையாளங்கள் தணிந்துவிடும் என்று அவளுக்கு உறுதிகூறி ஒவ்வொரு வழியையும் பின் பற்றி அவளுடைய மனக்கவலையை போக்க வேண்டும். இலேசான மிதமான பயிற்சி எப்பொழுதும் நன்மைதரும். பளுமிகுந்த, சிரமம் மிகுந்த வேலைகளை தவிர்த்தல் நன்று. கர்ப்பிணிப் பெண் கர்ப்பகாலம் முழுவதும் திறந்த வெளியில் உலாவி வருமாறு அறிவுறுத்தப்படுகிறாள்.

(தொடரும்)

S.விலாந்தி
தலைவர்
(சனாதன தர்மக்கழகம்)

# திருக்குறள் அறத்துப்பால்

**அதிகார வைப்பு முறை;**

அந்நீர்த்தார் வகுத்தவற்றுள்,
அறம்,
இம்மை, மறுமை வீடெனும் முப்பயனும் நல்கும்
முதற் பொருளாம்.
அது,
பொருளுக்கும் இன்பத்துக்கும் மூலமாகி,
அவற்றை நிலைக்கச் செய்யும்.
அறம் அழியின் பொருள் இன்பங்கள் அழியும்
எனவே,
இவ்வுலகம் நிலைத்தற்கு அடிப்படையான,
அறத்தினை வலியுறுத்தல் அவசியமாதலின்,
**"அறன் வலியுறுத்தல்"** பாயிரத்தின்
நிறைவதிகாரம் ஆயிற்று.
இங்ஙனம் பாயிரவியலின் நான்கு அதிகாரங்களும்
வள்ளுவர் தம் பாவிகத்தினை வலியுறுத்தி நிற்பன
அறத்தின் தொடக்கமும் முடிவுமாக **கடவுள்**
அக்கடவுளின் கருணை வெளிப்பாடாய்,
அறம் பொருள் இன்பங்களை
உலகில் நிலைக்கச் செய்யும் **மழை**
அவற்றின் பொருள், இன்பங்களை
வகுத்தர வல்ல **நீத்தார்** தம் பெருமை
அவரால் வகுக்கப்பட்ட **அறத்தினது வலி** என
பாயிரவியலின் அதிகார அமைப்பில்,
தொடர்பு அமையும்.

இனி, அவ்வறத்தை,
**இல்லறம், துறவறம்** என இருகூறாய்ப்பிரித்து,
அவ்விரண்டினுள் முதலானதாய,
இல்லறத்தினை வகுச்சத்தலைப்படும் வள்ளுவர்,
பாயிரவியலைத் தொடர்ந்து,
**"இல்லறவியலை"** அமைத்தனர்.
அவ்வில்லறவியலுள்,
அதிகார வைப்பு முறையூடு,
வள்ளுவர் காட்டும் குறிப்புணர்வாம்.

இல்லறம் துறவறத்தின் முதனிலை.
இவ்வில்லறத்தால் வளர்ச்சியுற்று,
துறவறம் எய்துதல் இயல்பாம்.
எங்ஙனமோ? எனின்,
இல்லறம்,
அன்பை உருவாக்கி,
வளரச்செய்து,
முடிவில் அத்தனை அருள் எனும் நிலைக்கு உயர்த்தும்
தொடர்புடையார் இடத்துப் பிறப்பது அன்பு.
தொடர்பிலார் இடத்துப் பிறப்பது அருள்.
இவ்வருளே துறவறப்பிறப்பு.
தனி மனிதனை இப்பண்பு நோக்கி நகர்த்தலே
இல்லறத்தின் **பயனாம்.**
[illegible] துறவறத்தின் முன் வைக்கப்பட்டது.
இல்லறம் துறவறத்தை நோக்கி வளர்தலை உளம் கொண்டு இல்லறவியல் அதிகார அடுக்கு முறையினை நோக்குவாம்.

**கம்பவாரிதி இ. ஜெயராஜ்**

(மீண்டும் தரிசிப்போம்)

## ஏழ்மையே விரத்திக்குக் காரணம்

உலகிலே மிகப்பெருந் தொகையினர் பரம ஏழைகள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயமாகும். இவ்வறிய மக்களின் வறுமையானது சமூகத்தில் பல பிரச்சனைகளுக்கு வித்திடுவதற்குக் காரணமாக அமைகின்றது. விரக்தி என்பது மக்கள் வாழ்க்கையில் பற்றற்ற நிலையைக் குறிக்கிறது. உயர்குறிக்கோளற்ற, விரக்தியே ஏழ்மை தோற்றுவிக்கப் படுகின்றது. இவர்கள் வாழ்வில் ஈடுபாடு அற்றவர்களாகவும், மன அமைதி அற்ற நிலையில் சமூகத்திற்கு வேண்டப்படாத தீய செயல்களைத் தன்னிச்சைப்படி மேற்கொள்பவர்களாகவும், காணப்படுகின்றனர். ஏழ்மை விரக்திக்கு எவ்வளவு தூரத்திற்கு இட்டுச் செல்கின்றது என்பதை வானத்தைக் கூரையாகவும், பூமியைப் படுக்கையா கவும், இருளைப் போர்வையா கவும், கொண்டு வாழ்க்கை நடத்து பவர்களையும், சாதிமதம் பார்த்து ஒதுக்கி வைத்தவர்களையும் எம் கண்முன்னே பார்க்கலாம்.

உலகில் வறுமையானது கிராமப்புறங்களிலும், நகர்களின் சேரிப் புறங் களிலும் மிகக் கூடுதலாகக் காணப்படுகின்றது. இவ்வறுமை நிலவுவதற்கு இயற்கை அனர்த் தங்கள், தனிப்பட்ட நடத்தை, சமூக அமைப்பு, அரசியற் பொருளாதார கலாச்சாரக் காரணிகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. வறட்சி, யுத்தநிலை போன்ற காரணிகளாலும் வறுமை ஏற்படுகின்றது. இத்தகைய சூழற் தாக்கத்தால் மனோ நிலையிலும் பாதிப்பு ஏற்படுகின்றது. தம்மைக் கைதூக்கிவிட உதவுவாரற்ற நிலையில் வறுமைவாய்ப்பட்டோர் தமது வயிற்றைக் கழுவுவதற்காக எதனையும் செய்யும் மனோதிடம் பெற்றுவிடுவதால் நேரற்ற வழி முறைக்குத் தள்ளப்படுவதால் சமூகப் பண்பாட்டுப் பிரச்சினைகள் தோன்ற வழி ஏற்படுகிறது. சமூகத்தினால் தூற்றப்படுபவர்களாக இத்தகைய வறுமையாளர் நிரப்பப்படு கின்றனர். இந்நிலையில் மரணத்தைத் தழுவக்கூட பயப்படுவதில்லை. நாட்டில் வேலையின்மையும் வறுமையைத் தோற்றுவிக்கிறது. வேலையற்ற நிலையில் சிலர் தற்கொலை கூடச் செய்யத் துணிவர். வேலையின்றி இருக்கும் போதும், குறைந்த வருமானத்தைப் பெறும் போதும், தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாத நிலை தோன்றுகின்றது. நாள்தோறும் இல்லாமை என்னும் நிலையில் உழலும் போது வாழ்வில் வெறுப்புத் தட்டும் நிலை ஏற்படுகின்றது. பலவீனங்கள் மீது துன்பத்தின் அளவானது சுமையாக அழுத்தும் போது சிந்தனைத் தூய்மை கெட்டுப்போகும் நிலை ஏற்படுகின்றது. எப்படி வந்தால் என்ன? என்ற நிலைக்கு அவர்கள் தள்ளப்படுகின்றனர். ஒருவனுக்குத் திறமை இருந்தும் பொருளாதாரக் கஸ்டத்தினாலும், அரசியல் காரணங்களினாலும் அவனது திறமை நசுக்கப்படுகிறது. இவற்றினால் தான் அவன் சமூக விரோதச் செயல்கட்கு உட்படுத்தப் படுகின்றான். அந்நிலையில் தண்டனை அனுபவிக்கும் நிலைக்கு ஒருவன் தள்ளப்படுவதினால் உண்மையில் அவனது இல்லாமை அங்கு நீக்கப்படுவதில்லை. அவனை ஒரு விரக்தி நிலைக்கு எமது சட்டம் தள்ளி விடுகிறது. ஏழ்மையும் விரக்தியும் விரட்டியடிக்கப்பட வேண்டுமானால் எமது நாட்டின் சட்டங்களிலும் திருத்தங்கள் மிக அவசியம்.

(தொடரும்)

**G. சுமதி**

(சனாதன தர்ம கழகம்)



## மன்னார் ஆலய வரலாறும் மக்கள் வாழ்வும்

மன்னார் நகர் வாழ் இந்துக்களின் முக்கிய வழிபாட்டு ஸ்தலங்களாக பல ஆலயங்கள் காணப்பட்ட போதிலும் அவற்றில் பிரசித்தி பெற்று விளங்கும் ஆலயங்களில் உப்புக்குளம் சித்திவிநாயகர் ஆலயம் தொன்மை பெற்று விளங்குகிறது. 1913ம் ஆண்டு யாழ் வண்ணார் பண்ணையைச் சேர்ந்தவரும், மன்னார் சக்கடத்தாராகப் பணிபுரிபவருமான திரு. குமாரையா முத்துக்குமார் அவர்களுக்கு சித்திவிநாயகர் ஆலயமும் அத்துடன் சேர்ந்த கட்டிடங்களும் அமைந்த 10 ஏக்கர் காணி அவரது தந்தையாரால் உரித்தாக்கப்பட்டது. ஆனால் இவ்வாலயம் எப்போது ஸ்தாபிக்கப் பட்டதென அறிய முடியாத போதிலும் 1875ம் ஆண்டில் இருந்து வழிபடப்பட்டு வருவதாக கருத்தப்படுகிறது. 1913ம் ஆண்டு தொடக்கம் 1946ம் ஆண்டு வரை திரு முத்துக்குமார் அவர்கள் பரிபாலனம் செய்து வந்தார்.

சின்னத்தம்பி கந்தையா (சுதுமலை) திரு முத்துநாகலிங்கம் (இணுவில்) திரு கார்த்திகேசு வைத்திலிங்கம் (இணுவில்) ஆகியோரைப் நம்பிக்கைப் பொறுப்பாளராகத் திரு.கு.முத்துக் குமார் அவர்கள் நியமித்து 02.04.1946ல் இவ்வாலயத்தையும் அதைச்சார்ந்த காணியையும் மன்னார் வாழ் சைவ மக்களுக்கு உரித்தாக்கினார். அன்று தொட்டு இன்றுவரை இவர்களின் வழிபாட்டில் திரு அம்பலவாணர், திரு ரகுநாதன், ஆகியோர் நம்பிக்கைப் பொறுப்பாளராக தெரிவு செய்யப் பட்டனர். இவர்களே அருகில் இருந்த ராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தையும் நிர்வகித்தனர். தம்மிடம் சேர்ந்து பணியாற்றும் பொருட்டும் 6 பேர் கொண்ட ஆலோசனைக் குழுவையும் நியமித்தனர். இவர்கள் காலத்தில் 1970ல் கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற்றதும் குறிப்பிடத்தக்கது.

பின்னர் திரு அம்பலவாணர் அவர்களின் இடத்திற்குத் திரு போ.மயில்வாகனம் அவர்கள் 1970லும் திரு மு.நாகலிங்கம் அவர்களின் இடத்திற்கு திரு க.ம.குலசிங்கம் அவர்கள் 1978லும் திரு கா. வைத்திலிங்கம் அவர்களின் மறைவின் பின் அவரது இடத்திற்கு அவரின் சகோதரரியின் மகன் திரு கு.யோகநாதன் அவர்கள் 1983லும் தெரிவு செய்யப்பட்டனர். இம் மூவருமே இப்பொழுதும் பரிபாலனம் செய்து வருகின்றனர்.

1970ம் ஆண்டிலிருந்து பிரம்ம ஸ்ரீ சபா மனோகரசர்மா அவர்கள் பூஜை செய்து வருகின்றார். சபா மனோகர சர்மா அவர்களுடைய பராமரிப்பில் வளரும் அவரது தமையனார் ச.பூரணாந்தாஸ்வர சர்மா அவர்களுடைய புத்திரர்கள் செல்வன் சிவரூபசர்மா, குகதாச சர்மா ஆகியோர் இவ்வாலயத்திலேயே 17.08.1988இல் உபநயனம் செய்யப் பெற்று அவர்களும் சிறிய தந்தையாரும் தற்போது பூஜை செய்து தொண்டாற்றுகின்றனர். இவ்வாறு இவர்களே மன்னாரில் உள்ள பல கோயில்களுக்கு விசேட பூசைகள் செய்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

இதன் பேறே சிவரூபசர்மா அவர்கள் முருகனின் திருப்பாதங்கள் பதியப் பெற்று இன்றுவரை அதே பாதச்சுவடிகள் இன்னும் காணப்

பெரும் பேசாலை சிவசுப்பிர மணிய சுவாமி கோயில் பூசகராக விளங்கத்தொடங்கினார். இக்கோயிலில் முருகனின் பாதச்சுவடிகள் இந்திய இராணுவ ஆட்சிக் காலத்தில் ஒருநாள் இரவு 12 மணியளவில் ஓர் உருவம் ஆலய மண்டபத்தில் உலாவுவதை இந்திய இராணுவத்தினரே கண்கொண்டு பார்த்ததாகக் கூறினர். அடுத்தநாள் விடியச் சென்று மண்டபத்தைப் பார்த்த போது பாதச்சுவடிகள் பல காணப்பட்டன. அதில் பெருவிரல் அமைப்பு முருகவேலினை ஒத்ததாக கூறப்படுகிறது. இவ்வாறே இன்னும் அந்தப் பாதச்சுவடுகள் காணப்படுகின்றன. இவ்வாறு பல கோயில்கள் இன்னும் மன்னார்த்தீவில் அருள் பாலிக்கின்றன.

**இன்று மன்னார்த்தீவில் பல யாழ் மக்கள் இடம் பெயர்ந்து வாழுகின்றனர். இந்நேரத்தில் இங்கு மத மாற்றங்கள் நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. சைவ சமயம் ஒருபோதும் எவரையும் மதம் மாற்றுவதும் இல்லை. வருவோரைத் தடுப்பதும் இல்லை. போவோரை வேண்டாம் என்று கூறுவதும் இல்லை. மொத்தத்தில் பிற மதங்கள் போன்று அல்லாது மனிதருக்கு தனி மனிதசுதந்திரத்தை வாரி இறைத்து விட்ட ஒரே நெறி ஆகும். இதனால் இன்று மன்னாரில் பல இந்து அமைப்புகள் உருவாக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.** அவற்றில் சில

1. **சைவ மங்கையர் கழகம்**
2. **இந்து இளைஞர் மன்றம்**
3. **இந்து மன்றம்**

இவை அனைத்தும் எமது கழகத்தின் சார்பில் **ஜெ.பிறேம்குமார்** மன்னார் சென்று மன்னார்த்தீவின் பிரதமகுரு பிரம்ம ஸ்ரீ மனோகரசர்மா அவர்களிடம் இருந்து பேட்டியின் ஊடாகப் பெற்ற தகவல்கள்.

**அன்பார்ந்த மன்னார் மக்களே**

இலங்கைத்தீவில் உள்ள இந்து மக்களுக்கு ஒரு பொதுவான சஞ்சிகை உருவாக்கும் பொருட்டு ஒவ்வொரு பிரதேச ஆலயங்களினதும் வரலாறுகள், கட்டுரைகள் இதில் பிரசுரித்து விநியோகிக்கப்படும். அதன் பொருட்டுப் பல இன்னல்களை அனுபவித்து வரும் மன்னார் வாழ் இந்து மக்கள் நீங்கள் அனுபவிக்கும் கஷ்டங்களை எழுதி அனுப்பினால் இலங்கையின் மற்றைய மக்களும் உங்களது இன்னல்களை அறிய முடியும். தமிழர்களின் கஷ்டம் உலகத்திற்குத் தெரியும். ஆனால் இந்துக்கள் அதைவிட எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பதைத் தெரிவிக்க வேண்டாமா? ஒத்துழையுங்கள் "சங்கநாதம்" எங்கும் முழங்கட்டும்.

**ஆசிரியக்குழு**



உலகிலேயே உள்ள மிகப்பெரிய நடராஜர் சிலை

உயரம் : 10 அடி
அகலம் : 8 அடி 3 அங்குலம்
எடை : 2420 கிலோகிராம்

பஞ்சஉலோகத்தில் ஒரே வார்ப்பில் உருவானது. இதனைக் கும்பகோணம் சிற்பி அருணசடேஸ்வரர் வடிவமைத் துள்ளார்.

இதனுடைய மதிப்பு:- ரூ 14 லட்சம் இந்தியாவில் நெய்வேலியில் உள்ளது.



தொகுப்பு T.Thavasuthan

## தமிழ்ச்சமுதாயமும் இந்துச் சமுதாயமும் அழிவுப்பாதைக்குச் செல்வது ஏன்?

நமது வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கும், அபிவிருத்திக்கும் முயற்சி, ஒற்றுமை, உழைப்பு, நம்பிக்கை என்பன முக்கியமான ஆயுதங்களாகும். எனவே இந்துத் தமிழர்களாகிய நாம் இந்நான்கு ஆயுதங்களையும் சரியான பாதையில், தகுந்த நேரத்தில் சிறந்த விளைவைப் பெறும் நோக்கில் பிரயோகித்து சரிவை நோக்கிச் செல்லும் தமிழ்ச்சமுதாயத்தினையும், இந்து சமயத்தினையும் தலைநிமிரச் செய்வோம் வாரீர்.

நமது தமிழ்ச் சமுதாயம் அழிவுப்பாதையில் செல்கின்றமைக்கு முதன்மைக்காரணம் ஒற்றுமையின்மையேயாகும். உதாரணமாக தமிழ்மாணவர்களுக்கு ஒரு அநீதி இழைக்கப்படுகிறது. ஆனால் தமிழ்ப் பாடசாலை மாணவர்கள் மதகுருமார் எல்லோரும் ஒன்று கூடி குரல் கொடுக்கின்றார்களா? இல்லை, நமக்கு நேரமில்லை, வேறொருவருக்குத்தான் நிகழ்கிறது என விட்டு விடுகிறார்கள். ஆனால் சகோதர சமுதாயத்தை எடுத்துக்கொண்டால் தமது மாணவன் ஒருவனுக்கு அநீதி ஏற்பட்டு விட்டால் அனைத்துப் பாடசாலை மாணவர்கள், பல்கலைக் கழக மாணவர்கள், மதகுருமார் ஆகியோர் வீதியில் குதித்துப் போராட்டங்கள் நிகழ்த்துகிறார்கள். குரல் எழுப்புகிறார்கள். தமக்கு உரிய நீதியைப் பெற்றுக் கொள்கிறார்கள். இதிலிருந்து எமது தமிழ்ச்சமுதாயத்தின் ஒற்றுமை எந்த அளவில் உள்ளது என அறியலாம். எனவே தமிழர்களாகிய நாம் போலிக்கௌரவங்களையும் பகட்டையும் தவிர்த்து ஒரே தமிழினம் என்று ஒன்றுபட்டு ஒன்றாக குரலெழுப்பி உரிமைகளையும் நீதியையும் பெற்று தமிழ்ச்சமுதாயத்தைத் தலை நிமிர்த்துவோம்.

நாம் ஈராக் நாட்டை எடுத்துக் கொண்டால் மக்கள் அனைவரும் ஒற்றுமையாக ஒருதலைவனின் கீழ் ஒன்று சேர்ந்து எந்தவொரு சர்வாதிகாரத்திற்கும் அடிபணியாமல் தலைநிமிர்ந்து நிற்கின்றார்கள். ஈராக்கிய பெண்கள் கூட அமெரிக்காவிற்கெதிராக ஆயுதமேந்த தயாராகிறார்கள் என்றால் அவர்களின் நம்பிக்கையையும், ஒற்றுமையையும் பற்றிச் சொல்லவும் வேண்டுமா? எனவே ஒவ்வொரு இந்து தமிழனும் நம்பிக்கையையும், ஒற்றுமையையும் தம்மிடையே வளர்த்து தமிழ்ச்சமுதாயத்தினை தலைநிமிரச் செய்ய வேண்டும்.

இனி நாம் இந்து சமயம் ஏன் அழிவுப்பாதைக்குச் செல்கிறது? என ஆராய்வோமானால் எமது முரணான சிந்தனையும், முயற்சியின்மையுமே யாகும். நாம் கோயிலுக்கு செல்வதன் முக்கிய குறிக்கோள் இறைவனை தரிசித்து மனதினை சாந்திப்படுத்துவதாகும். ஆனால் நாம் அதைச் செய்கின்றோமா? இல்லை. கோயிலை ஊர் வம்பளக்கும் களமாகவும், வியாபாரஸ்தாபனமாகவும் மாற்றி மனதினை சாந்திப்படுத்துவதினை விடுத்து கோயிலில் இருந்து பெரும் மனச்சுமைகளை சுமந்து வீடு செல்கின்றோம். தலைநகரில் சில ஆலயங்களில் குறிப்பிட்ட சில விசேட தினங்களில் குறிப்பிட்ட தொகைக்கு குறைந்த பற்றுச் சீட்டுக்கள் வழங்கப்படுவதில்லை. கோயிலுக்கு செல்லும் போது பழம், பாக்கு வெற்றிலை, தேங்காய், பூக்கள், பால் போன்றவற்றை நமக்கு இயன்றளவு எடுத்துச் சென்று இறைவனுக்கு அர்ப்பணிப்பதை விடுத்து கடதாசி அதாவது பற்றுச்சீட்டு கொடுப்பதா? தொன்று

தொட்டு வந்த பாரம்பரியம். கோயிலில் கும்பிடும் போது என்ன வழக்கமுறைகளை பின்பற்ற வேண்டும் என்று அறிந்து வைத்திருக்கிறோமா? அல்லது அறிய முற்பட்டிருக்கிறோமா? என்று சிந்தித்தால் எமது நிலைபுரியும். ஏதோ கும்பலில் கோவிந்தா என்பது போல் கூட்டத்துடன் கூட்டமாக நின்று அரோகரா மட்டும் அழகாக கூறுகிறோம்.

கோயில் திருவிழாக்கள், சமய பண்டிகை நாட்களில் பட்டிமன்றம், வழக்காடுமன்றம் என்பன நடாத்தி என்ன ஆராய்கிறோம்? வாழ்க்கைக்கு அவசியம் சினிமாவா? சின்னத் திரையா? பெண்களுக்கு அழகு சேலையா? சுடிதாரா? என சமய முன்னேற்றத்திற்கு தகாதவற்றை ஆராய்கிறோம். இந்துசமய தத்துவங்களையும், விழுமியங்களையும் அறிய முயற்சிப்பது இல்லை. அதற்காக உழைப்பதில்லை. எனவே இந்துதமிழர்களாகிய நாம் இந்து சமய தத்துவங்களையும், விழுமியங்களையும் அறிய முயற்சியையும், உழைப்பையும் பயன்படுத்தி இந்துசமயத்தினை மீட்டெடுப்போம் வாரீர்.

**T. தவசுதன்**

*(சனாதன தர்ம கழகம்)*

## ஆழ்ந்த நித்திரை உங்களுக்கு உள்ளதா?

எமது சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கும் பாரதூரமான விளைவுகளில் ஒன்று மனநிம்மதியின்மையாகும். இது மழலைச் செல்வங்களை தவிர எல்லா வயதிற்கு உட்பட்டோரையும், இருபாலாரையும் விட்டு வைப்பதில்லை. இது ஒவ்வருவரையும் ஆட்கொள்ளும் விதம் வேறுபட்டது. மாணவர்களைப் பொறுத்தவரையில் பரீட்சைக் காலத்திலும், அதற்கு அண்டிய காலங்களிலும் மன உழைச்சல் (Tension) காரணமாக நித்திரையின்மை, மனச்சோர்வு என்பனவும் சிலருக்கு அதிகப்படியான நித்திரையும் ஏற்படும். இதேவேளை வேலைக்குச் செல்பவர்களை எடுத்துக் கொண்டால் அதிக வேலைப்பழு காரணமாக மன உளைச்சல் ஏற்பட்டு வேலையின் மீது வெறுப்பு, நித்திரையின்மை என்பன ஏற்படும். வயோதிபர்களை எடுத்துக் கொண்டால் தமது பிள்ளைகள் உறவுகள் பற்றிய கவலைகள் ஆட்கொள்வதால் நிம்மதியின்மை ஏற்படுகிறது. இம்மன உளைச்சல் காரணமாக ஒரு முழுநாள் வேலைசெய்வதற்குரிய சக்தியை ஒரே நிமிடத்தில் இழக்கின்றான். அதாவது பின்வரும் இருவழிகளில் இடம்பெறுகிறது.

1). **அங்க அசைவுகள் காரணமாக வீணடிக்கப்படுகிறது.**

(2). **மனக்கவலைகள், கோபப்படுதல் பேராசை போன்ற உணர்ச்சிகளால் வீணடிக்கப்படுகிறது. கட்டுப்படுத்தப்பட முடியாத உணர்ச்சி களால் பிராணசக்தி (பிரபஞ்ச சக்தி) வீணடிக்கப்படுகிறது.**

அதிகப்படியான உணர்வுகளைக் கட்டுப்படுத்த மனதினை தளர்த்தி உடலையும் உளத்தையும் சமநிலைப்படுத்தலாம். இதற்குரிய ஒரேவழி சாந்தி ஆசனமாகும். இதனை மூன்று வழிகளில் மேற்கொள்ளலாம்.

(1) உடல் ரீதியில் (Physical Method)
(2) உளரீதியில் (Mental Method)
(3) ஆன்மீக ரீதியில் (Spiritual Method)

நாம் ஒரு வேலையை ஆற்றும்போது உணர்வுகள் மனத்தில் உற்பத்தியாக்கப்பட்டு மூளைக்கு கடாத்தப்பட்டு நரம்புகள் மூலம் உணர்வுகள், தசைகளுக்கும், சுரப்பிகளுக்கும் கடத்தப்பட்டு வேலை ஆற்றப்படுகிறது. இதேபோல் உளத்தினை தளர்த்துவதற்கும் பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். எவ்வாறு உடல்ரீதியில், உளரீதியில், ஆன்மீக ரீதியில் உடலையும் உளத்தையும் தளர்த்தலாம்? என விரிவாக அடுத்த இதழில் ஆராய்வோம்.

**யோகாசனக்குழு**

*(சனாதன தர்மகழகம்)*



# இந்துக்களே நாம் எங்கே போகிறோம்

## பிறந்த நாள் கொண்டாட்டமா? அமங்களகரமான கொண்டாட்டமா?

**-ஆர்.பி.வி.எஸ். மணியன்-**

நண்பரது இல்லத்திற்குப் போயிருந்தேன். அவரது இல்லத்தவர்கள் யாவரும் ஹாலில் குழுமியிருந்தனர். நான் வருவதைப் பார்த்த நண்பர் "வாங்க! வாங்க! நல்ல சமயத்தில் வந்திருக்கீங்க. என்பையனுக்குப் பிறந்த நாள் நல்ல வேளை, அவன் மெழுகுவர்த்தியை ஊதி அணைத்துக் கேக் வெட்டுகிற சுப முகூர்த்தத்திலே வந்திட்டீங்க" என்றார் எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. நண்பர் ஹிந்துதான். அவரது பையன் பிறந்த நாளைக் கேக் வெட்டி, மெழுகுவர்த்தியணைச்சுக் கொண்டாடுகிறாரா? அட ராமா! உள்ளே சென்றேன். ஒரு டேபிள் மீது பெரியதொரு கேக் - ரொம்ப விலை கொடுத்து வாங்கியிருக்க வேண்டும் - வைக்கப் பட்டிருந்தது. அதில் நண்பரது பையன் பெயர் பொறிக்கப் பட்டிருந்தது. பிறந்த நாளுக்கென்றே விசேஷ ஆடர் கொடுத்து தயாரிக்கப்பட்டிருந்த பர்த்டே கேக்.

அதில் சில மெழுகுவத்திகள் பொருத்தப்பட்டிருந்தன. நண்பரின் பையன் பேண்ட் - ஷர்ட் - ஷபாரி ட்ரெஸ்ஸில் பளபளத்தான். அவன் தலை அழகாக வாரிவிடப்பட்டிருந்தது. பையனுக்கு ஆறு வயது முடிந்து ஏழு பிறக்கிறதாம். முகத்தில் ஸ்னோபவுடருக்கு குறையில்லை. ஆனால் நெற்றியில் மட்டும் ஒன்றுமே இல்லை - பாழ்நெற்றி. டேபிளைச் சுற்றி பெற்றோரும் உற்றாரும் நின்றிருக்க ஏற்றப்பட்டிருந்த மெழுகுவர்த்தியை ஊதி அணைத்தான். அனைவரும் ஒரே குரலில் "ஹேப்பிபர்த்டே டு யூ" என்று ஒப்பாரி வைத்தார்கள். ஒப்பாரி என்று சொன்னதற்காகக் கோபப்பட வேண்டாம்.

பையன் பிறகு கத்தியை எடுத்துக் கேக்கை வெட்டினான். தன் பெயர் பொறித்த கேக்கைத்தானே வெட்டினான். தன் பெயரைத்தானே வெட்டிக்கொண்டான். அதில் ஒரு சிறுதுண்டை எடுத்து அவன் வாயில் திணித்தாள் தாய். பிறகு ஒவ்வொருவருக்காகவும் ஒரு துண்டு வெட்டி குழந்தையே கொடுக்க வந்தான். "அப்பா, குழந்தாய்! நீ தீர்க்காயுஸா, சிரஞ்சீவியாய் சகல சௌபாக்கியங்களோடும் வாழ பகவானைப் பிரார்த்திக்கிறேன். எனக்குக் கேக் வேண்டாம். நான் சாப்பிடுவதில்லை" என்றேன் சுற்றியிருந்தவர்களிடம் கேக்கைக் கொடுத்த போது அவர்கள் அதை மகிழ்ச்சியுடன் வாங்கிக் கொண்டு "ஹாப்பி பர்த்தே டு யூ" என்று ஓலமிட்டதிற்கும், நான் இப்படிச் சொன்னதிற்கும் பையன் வேறுபாட்டை உணர்ந்து கொண்டான். ஆனால் அதுதான் அவன் பழக்கப் பட்டிருந்த ஒன்று. நான் சொன்னதும் ரொமபப்புதிதாக இருந்திருக்கும். பிறந்தநாள் கொண்டாடுவதற்கும் கூடவா - ஹிந்துக்கள் தங்கள் பண்பாட்டை இழந்துவிட வேண்டும்?

ரொம்பப் படித்த பெரிய மனிதர்கள் - செல்வந்தர்கள் முதல் நடுத்தர வர்க்கம் வரை எல்லா இந்து இல்லங்களிலும் குழந்தைகளின் பிறந்தநாள் இங்கிலீஷ் கலண்டர்ப்படி பிறந்த தேதி வரும் நாளில் - கேக் வெட்டி - மெழுகுவர்த்தியணைத்து கொண்டாடுவது - வெட்கக்கேடான சமாசாரம். வெட்டுவது அணைப்பது இது அமங்கலமான செயல். பிறந்தநாள் ஒன்று மங்கள நிகழ்ச்சி மங்கல நிகழ்ச்சியில் ஏன்? இந்த அமங்கலச் சடங்குகள். காரணம்: இங்கிலீஷ்காரனிடம் நாம் கற்றுக் கொண்டது. மேற்கத்தைய

நாகரிகத்தை அப்பட்டமாக நகல் செய்யத்தானே. இன்னும் ஒரு இந்து நண்பன் பெருமையாகச் சொன்னான். "ஸார்! எங்க வீட்டில இந்த மெழுகுவத்தி அணைக்கிற சமாச்சாரம் எல்லாம் இல்லை வெறும் கேக் வெட்டுறதோடு சரி" என்றார்.

இன்னும் சில பேர்களுடைய இல்லங்களில் இந்து முறைப்படி சுவாமி வழிபாடு, கோயிலுக்குப் போய் அர்ச்சனை பண்ணுவது அதோடு கேக் வெட்டும் புனிதச் சடங்கும் இணைந்து நடக்கிறது. இந்த விபரீத மனோபாவத்திற்கு விடிவு எப்போது? நமது சமுதாயத்தில் பிறந்தநாள் -ஒருவன் பிறந்த ஜன்ம நக்ஷத்திரத்தில்தான் கொண்டாடப்பட வேண்டும். ஆங்கில கலண்டர் ப்படி பிறந்தநாள் கொண்டாடப்படுவது தவறு. தமிழ்ப் பஞ்சாங்கம் பார்த்து ஜன்ம நக்ஷத்திரம் வரும் நாளை அறிந்து ஆயுஷ்ய ஹோமம் செய்து பிறந்தநாள் கொண்டாடுவதுதான் சிலாக்கியம்.

ஆயுஷ்ய ஹோமம் செய்கிற பழக்கமில்லாதவர்கள் கூட அவரவர் குல ஆசாரப்படி பிறந்தநாள் கொண்டாடக் கோயில் போவது பிறந்தவரது நக்ஷத்தரத்திற்கு நமது இஷ்ட தெய்வத்திற்கு அர்ச்சனை செய்வது ஆகியவையே சாலச் சிறந்தவை. இப்படி ஆயுஷ்ய ஹோமம் போன்ற சடங்குகளை மூடநம்பிக்கைகள் என்று கூறும் பகுத்தறிவு வக்கிரங்களுக்குக் கேக் வெட்டுகிற, மெழுகுவர்த்தி அணைக்கிற மூடநம்பிக்கைகளை எதிர்க்க வக்கில்லாதது மட்டுமல்ல, கல்விக் கூடங்களில்கூட ஒரு குறிப்பிட்ட மாணவனின் பிறந்தநாள் என்றால் - அவன் அனைவருக்கும் சாக்லெட் தருவான் - உடனே அனைத்து ஆசிரியர்களும் மாணவர்களும் "ஹப்பி பர்த்டே டு யூ" என்று ஒப்பாரி வைப்பார்கள். ஏன்?

**"தீர்க்காயுஷ்மான் பவ"**

**"சிரஞ்சீவியாய் இருடா என் கண்ணே"**

**"தீர்ழீ வாழ்க"**

**"பல்லாண்டு பலகோடி நூறாயிரத்தாண்டு வாழ்க"**

என்றெல்லாம் நிறைய வாழ்த்தலாமே. குழந்தைகளின் நிறைய ஜன்ம நக்ஷத்திரங்களைத் தெரிந்து வரும்படி செய்து, அந்த நாளில் கல்வி கூடத்தில் பிராத்தனை நேரத்தில்அந்த குழந்தையின் க்ஷேம த்திற்காக அனைத்துக் குழந்தை களையும் கூட்டாகப் பிராத்திக்கச் சொல்லலாமே.

அதுபோலவே ஹிந்துக்கள் தங்களது 50வது வயது பூர்த்தி யடைவதை யெல்லாம் கொண்டாடும் பழக்கம் கிடையாது. ஷஷ்டியப்த பூர்த்தி என்று 60 ஆண்டுகள் நிறைவதைத்தான் விசேஷமாகக் கொண்டாடுவது மரபு. இந்த அறுபதில் என்ன விசேஷம்? ஒருவர் பிறந்த நாளன்று க்ருஹங்கள் எந்த நிலையில் இருந்தனவோ அதே நிலையில் அவரது ஜாதகப்படி மீண்டும் க்ருஹங்கள் அமைவது 60 ஆண்டு சுழற்சிக்குப் பின்தான். அவர் பிரபவ ஆண்டில் பிறக்கிறார் என்றால் மீண்டும் பிரபவ ஆண்டுவருவது 60 ஆண்டுகளுக்குப் பின்தான். எனவே தான் அந்த ஆண்டு வரும் ஜன்ம நக்ஷத்திரத்தை விசேஷமாகக் கொண்டாடுகிறோம்.

**ஹிந்துக்களின் காதில் இந்த வார்த்தைகள் விழுமா? அவர்கள் சிந்திக்கத் தொடங்குவார்களா?**

விஷ்வ இந்து பரிஷத்
சென்னை - இந்தியா

**மாத்தளையில் சனாதன சமுக அங்குரார்ப்பணம்**

மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்மன தேவஸ்தானத்தில 20.08.00 ஞாயிறு பகல் 2 மணிக்கு சனாதன தர்ம விழிப்புணர்ச்சிக் சமூகத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் கொழும்புக் கழகத்தின் சிரேஷ்ட அங்கத்தவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. நாறபதுக்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் கலந்து சிறப்பித்தனர். கல்வி, சமயம், பண்பாடு, கலாச்சார இலக்கிய சம்பந்தமான விடயங்கள் ஆராயப்பட்டன.



# இந்தியா காரைக்குடி ரிதம் ரேய்கி கிராண்ட் மாஸ்டர் DR ஜெகராஜன் B.A.M.S, M.D, M.Sc (Psy) அவர்களுடன் ஓர் நேர்முகம்

***ரிஷாந்தி:*** வணக்கம் DR ஜெகராஜன் அவர்களே. சனாதன தர்மயுவ விழிப் புணர்ச்சி கழக சார்பில் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

***டாக்டர்:*** வணக்கம்

***ரிஷாந்தி:*** "மனச்சோர்வு" என்ற விடயம் பற்றி நீங்கள் கருதுவது என்ன?

***டாக்டர்:*** மனச்சோர்வு என்பது ஒரு தனிப்பட்ட வியாதியின் ஆரம்ப அறி குறி என்றுகூறலாம். இதற்கு மூலகாரணம் மன இறுக்கம், மன அழுத்தம் அதாவது ஆங்கிலத்தில் **STRESS** எனப்படுகிறது.

***ரிஷாந்தி:*** இவை ஏற்பட முக்கிய காரணமாகக் கருதப்படுவன எவை?

***டாக்டர்:*** மனச்சோர்வு ஏற்பட முக்கிய காரணம் பயம், தன்னம்பிக்கை இல்லாமை, வாழ்வில் ஏற்படும் தோல்விகள், குடும்பச்சூழ்நிலை, பொருளாதார சூழ்நிலை, சுற்றாடல் பிரச்சனை, அன்றாட வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளை எதிர்கொள்ள முடியாமை என்பனவாகும். இத்தகைய சூழ்நிலைகளில் மன இறுக்கம் ஏற்படுகிறது. இவ்வாறு ஏற்படும் போது அவர் தன் உணவின் அளவை குறைக்க வேண்டும். அளவிற்கு அதிகமான சிந்தனைகளால் மன உளைச்சல் ஏற்படாது பார்க்க வேண்டும்.

***ரிஷாந்தி:*** இத்தகைய மனச்சோர்வில் சுடுபட்டு இருக்கும் போது ஒருவரது நிலை எவ்வாறு இருக்கும்?

***டாக்டர்:*** இம்மனச்சோர்வு என்ற நிலையை அடைந்த ஒருவர் தனிமையிலேயே அதிக நேரத்தை செலவழிப்பார். மற்றவர்களுடன் பேச அச்சப்பட்டு ஒரு தாழ்மையுணர்வு ஏற்படும். தன்னை அறியாமல் அழுதும் விடுவார். உடைகள் அலங்காரத்தில் அதிக ஈடுபாடு அற்றவராக காணப்படுவார். எந்நேரம் பார்த்தாலும் கோபம், பொறாமை, எரிச்சல், சோர்வு காணப்படும். இது போன்ற சூழ்நிலையில் மீண்டும் அவரை மிக மோசமான மனச்சோர்வுநிலைக்கு இட்டுச்செல்கிறது. இத்தகைய மனச் சோர்வு நிலையால்பாதிக்கப்படல் பெரும்பாலான தற்கொலைகள் இடம் பெற காரணமாகிறது.

***ரிஷாந்தி:*** சமூகத்தில் இவ்வாறு பாதிக்கப்பட்டவர் எவ்வாறு நடமாடுவர்?

***டாக்டர்:*** சமூகத்தில் நடமாடப் பயந்தவராகவும், எதையோ இழந்தவராகவும், எதையும் சந்திக்க துணிவின்றிக் காணப்படுவர். இவ்வாறு சோர்வுள்ள நிலையில் காணப்படும் ஒருவர் போதைக்கும், புகைத்தலுக்கும் அடிமையாகிச்

காணப்படுவர். இவ்வாறு அடிமையானவர்களை சந்தித்து காரணம் கேட்ட போது **"தம்மால் பிரச்சினைகளைச் சமாளிக்க முடியவில்லை"** என்பதே அவர்கள் புகைத்தலுக்கும், போதைக்கும் அடிமையாக காரணம் என்கின்றார். ஆனால் உண்மையில் இதுவல்ல காரணம். இவர்களுக்கு சரியான வழிகாட்டல் இல்லை.

***ரிஷாந்தி:*** அத்தகைய மனநிலை ஏற்படும் போது அவருக்கு எவ்வாறான பரிகாரத்தை வழங்கமுடியும்?

**டாக்டர்:** மனச்சோர்வு ஏற்படும் போது ஒரு மனநல மருத்துவரிடம் காட்டி நல்ல முறையில் சிகிச்சை பெற வேண்டும். வாழ்க்கை பயிற்சிகளையும், நடைமுறைப் பயிற்சிகளையும் வழங்க வேண்டும். இவ்வாறான பயிற்சிகளால் அவரை அந்நிலையில் இருந்து மாற்றலாம்.

***ரிஷாந்தி:*** இவ்வாறான பிரச்சினைகள் எந்த வயதில் ஏற்படுகிறது.

**டாக்டர்:** இது ஏதோ ஒரு வகையில் அனைவரையும் தாக்குகிறது என்றே கூறலாம். ஏனெனில் அன்றாட வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளை எல்லா வயதினரும் சந்திக்கின்றனர். மனச்சோர்வு ஏற்பட மனதும் ஒரு வகை காரணமாகிறது. ஒவ்வொரு வயதிலும் ஒவ்வொரு விதமான மனச்சோர்வு ஏற்படுகிறது. உதாரணமாக பள்ளிப்பருவத்தை எடுத்துக் கொண்டால் அவர்களது சூழ்நிலையில் ஏற்படும் பிரச்சினைகள், பிள்ளைகளின் பெற்றோருக்கு இடையில் ஏற்படும் பிரச்சினைகள், வீட்டில் உள்ள பொருளாதார பிரச்சினைகள், சுற்றாடலில் உள்ளவர்களால் ஏற்படும் பிரச்சனைகள் போன்றவற்றாலும் மனச்சோர்வுக்கு உட்படுகின்றனர். இளவயதில் ஏற்படும் தோல்விகள், விளையாட்டில் தோற்றுவிடுவோமா? பரீட்சையில் தோற்றுவிடுவோமா? என்ற சந்தேகங்களே மனச்சோர்வுகளை ஏற்படுத்துகிறது. இதனால் மாணவர்கள் போதை போன்ற தீயபழக்கங்களுக்கும் அடிமையாகிவிடுகின்றனர்.

***(நேர்முகம் தொடரும்)***

(மனோதத்துவ நிபுணர் ஜெகராஜா அவர்கள் எமது தலைமையகம் வந்த போது எமது கழக அங்கத்தவர் ரிஷாந்தி அவர்களால் மேற்கொள்ளப்பட்ட நேர்முக உரையாடலின் வாயிலாக......)



# தொலைந்து போன சொந்தங்கள்

தேவி பயணம் பெரிதல்ல உன்னைப் பிரிந்து செல்கிறது தான் மன வேதனை. உன்னைப்பார்க்க வேண்டும் என்று துடித்தேன் என்றான் கரன். தேவியும் கரனைக்கண்டு மகிழ்ந்தாள். கரனுக்கு வந்தநாள் தொடக்கம் மனதில் சில ஆசைகள் உண்டானது. கரன் தேவியைப் பிரிந்து போன போதுதான் கரனின் காதல் ஆழம் தெரிந்தது. அந்தப்பிரிவினால் கரன் பட்ட மனவேதனை அவன் இதயத்தையே தாக்கியது. இதனால் அவன் ஏக்கம் கொண்டான். மனதில் தானே தைரியம் வளர்த்தான்.

ஒருநாள் தேவியின் அண்ணன் சிவத்திடம் மனம் விட்டுப் பேசினான். உங்களுடன் நின்றுவிட்டு உங்கள் தங்கையுடன் பழக முடியாது. அதனால் நான் இனி உங்கள் கடைக்கு வரமாட்டேன். இனி நான் தேவியுடன் பழகப் போகிறேன் என்று கூறிவிட்டுச் சென்றான். சிவம் அதற்குச் சம்மதம் என்று மௌனம் காட்டினார். அன்றில் இருந்து தேவியுடன் பழக முற்பட்ட வேளையில் தேவி ஒன்றும் தெரியாதது போன்று நடித்தாள். உடனே கரனுக்கு ஏக்கம் வந்தது. ஆரம்பத்தில் காதலித்தவள் இப்போது விருப்பம் இல்லாதது போன்று நடித்தாள்.

தேவி கரனை விரும்பி விட்டு, பின்னர் ஏமாற்றும் போது கரனின் இதயமே வெடிப்பது போன்று ஏங்கினான். அப்பொழுதும் தேவி தேவி என்று மனம் புலம்பி நித்தமும் தேவியிடம் செல்வான். தேவியோ இருமனம் போல கரன்மீது இரக்கமே இல்லாதது போன்று வெறுப்புக் காட்டுவாள். கரன் தனது உயிரை விட தேவிதான் உயிர் என்று அளவில்லாப் பாசத்தை வளர்த்தான்.

இதையெல்லாம் தேவி அறிந்து கொள்ள வேண்டும் என்று தேவிக்கு கடிதம் ஒன்று எழுதினான். தேவி உடனே அந்தக் கடிதத்தைக் கிழித்து எறிந்தாள் அந்த வேளைதான் கரன் உணர்ந்தான். தான் வைத்த பாசம் வீணானது. தேவி கல் நெஞ்சம் படைத்தவள். இதயமே இல்லாதவள் என்று புரிந்தான். அன்றே கரன் நல்ல ஒரு முடிவு எடுத்தான். நான் தேவியை மறப்பதை விட வேறு வழி இல்லை என்று உணர்ந்தான்.

கரனும் தனது வேதனையைத் தீர்ப்பதற்காக நித்தமும் கோயில், தியானம் போன்று அமைதியைத் தேடிச் சென்றான். தேவியை மறக்கப் பழகிக் கொள்ள முற்பட்டான். தேவியின் மனதில் சில எண்ணங்கள் உண்டானது. நித்தமும் என்னைத் தேடிவருகின்ற கரன் ஏன் சில நாட்களாக வரவில்லையே? என்ன நடந்தது? ஒரு வேளை என்னை மறக்கிறானா? என்று சிந்திக்கத் தொடங்கினாள். தேவி யோசனையே கதியானது. தேவிக்கோ தூக்கம் இல்லை. உண்ண மனமில்லை தன்னைத் தானே உணர்ந்தாள்.

ஒருநாள் தேவி அவளது அக்கா சத்தியாவோடு வண்டியில் பிரயாணம் செய்து கொண்டிருந்த வேளையில் உள்ளே ஒருவன் அவனது ஆசனத்துக்கு முன்னே இருந்த பெண்ணைத் தகாத வார்த்தையால் திட்டிக்கொண்டிருந்தான். அந்த வேளைதான் தேவிக்குப் புரிந்தது அந்தப்பெண் அந்த ஆணை ஏமாற்றி விட்டாள். அதனால்தான் அவன் பைத்தியக்காரன் போல் இருக்கின்றான். என்று புரிந்தவுடன் பாதி வழியில் தேவி இறங்கினாள். திரும்பித்தன் வீட்டுக்கே வந்தாள்.

அன்று முழுவதும் நன்றாக யோசித்தாள். ஒருநாள் கரனுக்கு தேவி தொலைபேசி எடுத்தாள். தேவியின் குரல் கேட்டவுடன் கரனின் உள்ளம் பூரித்தது. உடனே கரன் "நான் நல்லாய் இருப்பது உனக்கு விருப்பம் இல்லையா?" என்று கேட்டான். அப்படி ஒன்றும் இல்லை. கரன் எனது சின்ன அண்ணா சுகயீனம் காரணமாக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். உடனே அவரைப் பார்க்க வரும்படி வற்புறுத்திக் கொண்டாள். கரன் அதற்கு மறுத்து விட்டான். சரி வீட்டில் என்றாலும் வந்து பார்க்கும்படி மன்றாடிக் கேட்டாள்.

(தொடரும்)

**S. கிருபாகரன்**

## ஓர் நாள்!...?

ஓர் நாள் மலராதோ?
தேர்கட்டி தெருவெங்கும்
ஊர் கூடி
உயிர் மகிழ ஓர் நாள் மலராதோ?

தேர்கட்டி, தெருவெங்கும்
தோரணங்கள் கட்டி
போர் முரசம் கொட்டி
பெருந்தமிழர் மகிழ்கின்ற
பெருநாள் மலராதோ?

மெல்லத் தமிழ் நிமிர்ந்து
மேனிக்கு மஞ்சளிட்டு
வண்ணத் திலகமிட்டு
வாசமுள்ள மலர் சூட்டி
வசந்தத்தின் வாசலிற்கு
வருகின்ற நாள் ஒன்று
வளமாக மலராதோ?

வேங்கைத் தமிழ் மறவர்
வீங்கிய புஜம் திரள
தாங்கி வரும் பல்லக்கில்
தமிழன்னை வருகின்ற
தமிழ் நாள் மலராதோ?

ஆட்டி அடக்கி எண்ணி
அடம் பிடித்து வந்தவரின்
ஓட்டை வாயடைக்க
ஓர் நாள் மலர்ந்துவிட
பேர்நாள், பெருநாள் என்கின்ற
நாள் மறைந்து
தமிழ் நாள் என்றொரு
திருநாள் மலராதோ?
உலகப் படமனிதன்
உருவமொன்று உதயமாகி
உன்னதம் ஓங்குகின்ற
உண்மைத் திருநாடு
சின்னப் பறவையென
சிலிர்த்தெழுந்து
சிறகுதைத்து
வண்ணமாய் வான் வெளியில்
வருகின்ற நிலைகண்டு
தேர் கட்டித் தெருவெங்கும்
ஊர் கூடி உயிர் மகிழும்
உயிர்த்தமிழன் நாள் மலராதோ?

**யாழ் ஞானபாரதி**



## PRANAYAMA LEADS TO MEDITATION

Man must meditate to experience total relaxation, This relaxation is not akin to any type of physical or mental relaxation, achieved through physical exercise, acrobatics or other such exercises to minds, brought up on clever advertising created sensations and knowledge.

Meditation practised by the ancient rishis and siddhas is for releasing man from the captivity of the mind. The mind, the seat of which is the brain, is as much a physical organ like the rest of the organs of the body. The brain does not produce thought, it receives though - elements from the universal flux and processes these according to its own capacity, which in turn depends on the individual man. The mind is like a lake, ever ready to produce waves and wavelets of thought at the merest touch upon it,. The human is not a mere physical or physiological entity. Not a composition of layers of matter. Beyond the visible physical realms are the more vital realms are the more vital realms not discernible to the eye or subtle instruments.. That everything in phenomena vibrates was postulated by Pythogaras in the 6th century, B. C. The rishis and siddhas knew much before that, i.e., over fivethousand years ago that every things in phenomena vibrates. These evolved beings discerned the beginnings of sound and called the sound platform OM., the creative vibration,

Every form and its movements, internal and external, are depend upon a mix of ranges of vibrations. Hindu metaphysics places prana as the basis for all manifestations of forces. Thought, emotion, muscular movements, movements of planets, force of gravity, are all manifestation of prana. This prana is the life-force, manifesting at the physical, mental, astral and the more subtle core-realm, the Atman. The human is a complex and dynamic unit composed of several planes of feeling and conciousness.

By regulating prana through pranayama, the mind - lake is controlled as a result , percetion deepens beyond the mental realm. This is the Meditation that takes man beyond the mental-psychological realm, nearer to his core self.

Relaxation achived through meditation brings man into harmony with the entire cosmos. Man from being a solidisied centre of limited awareness becomes a cosmic being - a total being, rounding - up his evolution

Kumaralakshmi Kumarasinkam

# MODERN PHYSICS AND VEDANTA

WHITHER PHYSICS TODAY ?

To answer the question, ' Whither Physics today ?' we have to look at the phenomenal progress made by physics right from the beginning of this century to the present day.

Round about the 1920s, physics broke its three- hundred - year old slumber and its complacent dreaming of a mechanomorphic, universe, a universe moving unfailingly like a machine in perfect order. Physics entered the macro-universe of Einstein's Relativity, and then the micro-universe of Heisenderg's Uncertainty. At the macrocosmic level physicists today have taken visionary flight far beyond the immagination of poets. From the beginning of 1983, physicists have begum even to construct a picture of our universe immediately after $10^{-43}$ seconds of its birth in the Big bang. Blackholes and whiteholes are emerging more powerfully in this world-picture. At the microcosmic level the atom, the atomos' of Democritus, the hard material, the unbreakable fundamental unit of all matter has already dematerialized into more than two hundred subatomic objects.

Physicists are hesitant to call these objects 'particles' any more. They are better described today as 'events' in the suboatomic world, or 'interconnected patterns of dynamic energy as physicist Fritjof Capra lived as two to three particle-seconds, one particle-second being $10^{-23}$ second. These particles have also emerged as 'waves' waves which are more unreal than real.

From the 'probability - wave' concept of Max Born has emerged a new speculation that photons and electrons may be 'conscious' or 'organic' The Copenhagen interpretation pointed to the idea that the external universe is a creation of our mind. To quantum physicists the universe is slowly appearing as an 'omnijective universe' a combination of the subjective and the objective . A scientist is no more a detached observer but is an active participator in the very processes of his experimentation. Physics has already entered the areas of Eastern mysticism. Space which appeared as curved in Einstein's Relativity. appears



today as ' the seat of most violent physics' as physicist John wheeler says. The impact of this new physics on the western mind is already being felt. 'How the omnijective nature of reality will change Western civilization remains to be seen. The only certainty is that the changes will be stupendous...., writes Michael Talbot. 2

'We are in the wake of a physics revolution' writes the Rock - feller University physicist Heinz Pagels in his latest publication on the frontiers of modern physics entitled the Cosmic Code (Quantum Physics as the Language of nature) published in 1982, comparable to the Copernican demolition for the anthropocentric world - a revolution which began with the invention of the theory of relativity and quantum mechanics in the first decades of this century....3

The superabundance of knowledge about the universe is raising an ever increasing number of more intricate questions whereas the language of ordinary life is becoming less capable of describing exactly what a the scientists are observing or discovering in experiments. The sub-atomic world is, as Einstein said like an 'unopenable watch' where we can see the pointers move on the dial, but can never know the exact mechanism underneath. The eminent physicist John A Wheeler in a recent interview remarked, 'Increasing knowledge of detail has brought an increasing ignorance about plan 4 Physicist Pagels writes, By the nature of phenomena it studies, science has become increasingly abstract. The Cosmic Code has become invisible. The unseen is influencing the seen '5 But since the 1970s physics has slowly started moving towards something profoundly simple and unifying. The destination of most theoretical physicists today is the 'grand unification' dreamed of by philosophers and saints millenniums ago. In the same interview mentioned above Physicist Wheeler said: "We find the world strange, but what is strange is us. It seems to me that we don't yet read the message

1. *Quoted in, Heinz Pagels, The Cosmic Code (New York: Bantam Books, 1983) p. 243*
2. *M.chael Talbot, Mysticism and the new Physics (New York: Bantam Books 1981p. 17*
3. *The Cosmic Code p. 310*
4. *New York times Magazine, 26 September 1982, p. 38*
5. *The Cosmic Code p. 310-311*

properly, but in a time to come, we will see it in some single simple sentence. 6.... The grand unification that physics contemplates today is not merely a unification of mass and energy, nor a mere unification of different kinds of cosmic forces, but for the first time in the history of science, it is going to be a unification of mind and matter, subject and object, scientist and experiment. That is what Wheeler means by ;What is strange is us'

Physicists are heading towards this vision of unity not under the influence of any philosophy or religion, ancient or modern, but by the impact of the results obtained in their experiments. Increasing knowledge of both the microcosmic world of atoms and nucleus and the macrocosmic world of blackholes have made physicists aware that they have to move deeper into the origins of the universe and still deeper into the way of how consciousness is related to this universe.

The first of these efforts has led to the latest unified theories in physics. The second one is leading another group of physicists to relate psychology and biology with physics. The urgency felt of late for the unified field theories is in a sense a result of the frustration of physicists in their chase for the ultimate building block of matter. 'Atom' or 'atomos' which was thought by Democritus to be the ultimate building block of matter, has today dissolved into more than 200 sub-atomic particles, of three varieties of mass, namely,Leptons (the lighter ones), Mesons (the medium ones') and Hadron (the heavy ones) Leptons ( the heave ones) And these particles are today thought to be composed of 'quarks' of six varieties, called 'up', down', strange', 'charmed', 'bottom' and 'top' quarks In order to hold these quarks together physicists today are speculating on the existence of another sub-atomic particle called 'gluon' Physicists are wondering about the end of this chase for the ultimate building block of matter. Mathematician Paul Davis of New castle University said ' does not such proliferation of quarks and gluons make nonsense of the claim that they elementary particles / '7

Here comes the consoling message from the proponents of unified theories. They think that simplicity in physics may not

6. *New York Times Magazine 26 September 1982 p. 70*

7. *idid p. 44*



# சங்கநாதம் சஞ்சிகைக்கு ஆலோசனை வழங்குவோர்

★ வணக்கத்துக்குரிய சுவாமி பூர்ணானந்தகிரி (இந்தியா) மடாதிபதி தர்மகர்த்தா ஸ்ரீ தெய்வானை அம்மன் தேவஸ்தானம் - கதிர்காமம்

★ திருமதி. செல்வம் கல்யாணசுந்தரம் **(B.A. Barrister-at- Law)** நம்பிக்கைப் பொறுப்பாளர்- சிவானந்த தபோவனம் திருக்கோணமலை.

★ திரு. கம்பவாரதி இ. ஜெயராஜ் (அமைப்பாளர் அகில இலங்கைக் கம்பன் கழகம்)

★ திரு **K.** விநாயகசோதி நம்பிக்கைப் பொறுப்பாளர்- சிவானந்த தபோவனம். திருக்கோணமலை.

★ செல்வி குமாரலட்சுமி குமாரசிங்கம் **B. Sc (Hons) Lond. School of Economics)** காப்பாளர் - சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகம் நம்பிக்கைப் பொறுப்பாளர் சிவானந்த தபோவனம் - திருக்கோணமலை.

★ திரு. தமிழ்வேள். இ.க. கந்தசுவாமி. தமிழ் ஆசிரியர்

## செய்து பாருங்கள் பரிசினை வெல்லுங்கள்

**200/= 150/= 100/=**

1. நாயன்மார்கள் எனப்படும் சிவனடியார்கள் எத்தனை பேர்?
2. கோளறு பதிகம் என்ற பத்துப்பாடல்களைப் பாடியவர் யார்?
3. பஞ்ச பூதங்கள் யாவை?
4. வேத வியாசர் யார்?
5. முருகப்பெருமானின் பெருமையைக் கூறும் புராணம் எது?
6. சைவ சித்தாந்த அடிப்படையான மூன்று தத்துவங்கள் யாவை?
7. 'வைணவம்' என்பதன் பொருள் என்ன?
8. விநாயகர் அகவல் யாரால் பாடப்பெற்றது?
9. உலகிலேயே முதலில் தோன்றிய இலக்கியம் எது?
10. புராணங்களை எழுதியவர் யார்?
11. முதன் முதலில் விண்வெளி சென்ற பெண்மணி யார்?
12. இந்தியாவில் நோபல் பரிசினை முதலில் வென்றவர் யார்?
13. உலகின் வடதுருவத்தைச் சென்றடைந்த வீரர் யார்?
14. இரும்பு பெண்மணி என முதலில் அழைக்கப்பட்டவர் யார்?
15. நவீன ஓவியம் வரைவதில் புகழ் பெற்ற ஓவியவராக விளங்கியவர் யார்?
16. ஏழையாகப் பிறந்து சோவியத்ருஷ்யாவின் சர்வாதியாக உயர்ந்தவர் (1879-1953) இவர் யார்?
17. ஐக்கிய அமெரிக்காவின் முதல் ஜனாதிபதி யார்?
18. எவரெஸ்ட் ஏறிய முதலாவது பெண்மணி யார்?
19. நீர் மூழ்கிக்கப்பலைக் கண்டு பிடித்தவர் யார்?
20. இதரசன்(Hydrogen Bomb) வெடிகுண்டினை கண்டறிந்தவர் யார்?

மேலே உள்ள கேள்விகளுக்கு தெளிவான கையெழுத்தில் விடை எழுதி கூப்பனை நிரப்பி இரண்டையும் இணைத்து 20.09.2000 முன்பு அனுப்பவும்.

அனுப்ப வேண்டிய முகவரி
**சங்கநாதம்** No:03, Ridgeway Place
Colombo -04


### செய்து பாருங்கள் பரிசினை வெல்லுங்கள்

பெயர்:.................................................................
முகவரி:...............................................................



## சங்கநாதம் குறுக்கெழுத்துப் போட்டி இல 03

200/= 150/= 100/=



**மேலிருந்து கீழ்**

1. கோயில் என சிறப்பிக்கப்படும் தலம் (இந்தியாவில் உள்ளது)
2. சங்குகளில் இது சிறப்பானது
3. நாற்பாதங்களில் ஒன்று (குழம்பியுள்ளது)
4. இரக்கம் என்றும் பொருள்படும்
5. நவராத்திரியின் கடைசி நாள் இது கொண்டாடப்படும். (குழம்பியுள்ளது.
9. ஔவைக்கு நெல்லிக்கனி கொடுத்த வேந்தன்.
11. அறுவகை சமயங்களில் ஒன்று
14. தருமர் இது ஆடித்தால் நாட்டை இழந்தார்
15. மகாபாரதத்தை இயற்றியவர், திரும்பியுள்ளார்.
19. இது அறுபத்திநான்கு என்பர்.

**இடமிருந்து வலம்**

1. சைவசித்தாந்தத்தின் மணிமுடியாக திகழும் நூல்
6. ஒரு சிறந்த ஆலயத்திற்கு இருக்க வேண்டியவற்றில் ஒன்று
7. உலகிற்கு முதற்காரணம்; திரும்பியுள்ளது (சைவசித்தாந்தத்தின் படி)
8. அழகு என்றும் பொருள்படும்; கண் மை என்றும் சொல்லலாம். குழம்பியுள்ளது
10. மங்கைக்கு ஒத்த சொல்
12. ஆன்மாவை இப்படியும் சொல்லலாம்
13. வேதங்களில் ஒன்று
16. பெண்ணைக் குறிக்கும் இரண்டு எழுத்துச் சொல்
17. துன்பமின்மையைக் குறிக்கும், இப்படியான வாழ்வை யாவரும் விரும்புவர் குழம்பியுள்ளது.
18. முருகனின் திருநாமங்களில் ஒன்று
20. வேள்வி என்றும் சொல்லலாம்.
21. ஜனகனின் நாடு. சீதை வாழ்ந்த இடம்
22. பண்டைய அரசிளங்குமாரர் வில்லில் சிறந்து விளங்கினர்.
23. ஒரு மாதம்.

மேலே உள்ள குறுக்கெழுத்துப் போட்டியில் பங்குபற்றி அவற்றை ஒரு தபால் அட்டையில் ஒட்டி அனுப்பவும். விடைகள் 20.09.2000 முன்பு கிடைக்க வேண்டும்.

**அனுப்ப வேண்டிய முகவரி**
**சங்கநாதம் குறுக்கெழுத்துப் போட்டி**
**No:03, Ridgeway Place Colombo -04**

# சங்கநாதம்

ஒவ்வொரு இந்துவின் வீட்டிலும் தவழ வேண்டிய மாத சஞ்சிகை இன்றே சந்தாதாரராகி ஊக்குவியுங்கள்

## தனிப்பிரதி 10/= ஆண்டுச்சந்தா 140/=

நீங்கள் காசுக்கட்டளையாக அனுப்புவதாயின் வெள்ளவத்தை தபாற் கந்தோர் என்று குறிப்பிட்டுச் சங்கநாதம், **No-03 Ridgeway Place Colombo - 04** ற்கு அனுப்பவும்.

காசோலை மூலம் அனுப்புவதாயின் சகல காசோலைகளும் குறுக்குக் கோடிடப்பட்டுக் கீழ்க்கண்டவாறு எழுதப்பட வேண்டும்.

**Youth League For Sanathana Dharmic Perception**
**A/C No. 555650 -101**

## சங்கநாதம் சஞ்சிகை பெறக் கூடிய இடங்கள்

1. கொழும்பு சனாதனதர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகம் **No-03 Ridgeway Place Colombo - 04 T/P : 584145 - (01)**
2. ஸ்ரீ இராமகிருஷ்ண விவேகானந்த பேரவை பதுளை.
3. திவ்விய ஜீவன சங்கம் சிவானந்த தபோவனம் உப்புவெளி திருக்கோணமலை 026- 21469 - (02)
4. அருள் மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் ஹட்டன்
5. ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி கோயில் பொகவந்தலாவ
6. சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சி கழகம் (கிளை) **No-38 Vihara Road** மாத்தளை 066 - 33014 - (03)
7. ஸ்ரீ கதிரேசன் கோயில் தலாவாக்கலை.
8. ஸ்ரீ S. மனோகரக் குருக்கள் மன்னாரத்தீவு ஆலயங்களின் விசேட பிரதிநிதி உப்புக்குளம் சித்தி விநாயகர் ஆலயம் மன்னார்.



# PANINI WAS A COMPUTER WIZ

Panini, India's 7th BC Sanskrit grammarian. Can perhaps be called the first software man without hardware! After 30 years of trying to make natural language compatible to computer programming, scientists have realize that Panini had done it in a way 2006 years ago

A NASA scientist, Mr. Rick Briggs after he discovered Sanskrit and Panini, was able to get hold of the link between artificial intelligence and the 4000 rules of Panini's Sanskrit grammar that were so scientific and logical as to closely resemble structures used by computer scientists. until then, million of dollars have been pumped into research with many western countries doing extensive work on the subject.

How does panini's grammar work? Grammar is basically an abstraction.Scientists say the degree to which a language s sounds ambiguous and cumbersome is a degree to which that languae is " natural" and deviates from precise or "artificial"

Panini has made Sanskrit precise, concise and complete. It is like a set of condensed codes for the entire language with some rules attached. It is a terse, condensed form of Sanskrit which paradoxically at times becomes so obtuse that a commentary is neccessry to clarity it. but then it can formulate logical relations in the language with scientistic presicion. Panini scientists point out, can be conceived like a computer that generates correct words/sentences with the basic inputs. The computer taking the inputs uses the Panini rules and flashes the correct words or sentences in a logical order..

But scientists have gone a step forward They are trying to develop a computer friendly grammar, like Panini for other languages. All languages have universal rules like all of them have nouns, pronouns, verbs, adjectives, etc. Effort is on to work out a Panini model for many languages. Scientists are trying to develop a mathematical and computational grammar for them.

Cont.....

# கண்ணதாசனோடு சில நிமிடங்கள்

***நம்பிக்கை (தொடர்ச்சி)***



**ந**ம்பிக்கையோடு முயன்றால், சாணத்தில் தங்கம் கிடைக்கும். சந்தேகத்தோடு பார்த்தால், தங்கமும் சாணம் மாதிரித்தான் தோன்றும். கல்யாணமான ஒருத்தி பாலகிருஷ்ணன் பொம்மையை வைத்துக் கொண்டு "வாடா கண்ணா! வாடா கண்ணா" அழைத்துப் பார்க்கட்டும். மலடி வயிற்றிலும் மகன் பிறப்பான். திருநீறோ, திருமண்ணோ இடும் போது கடனுக்கு இடாமல் நம்பிக்கையோடு இடு; அவை இருக்கும் வரை மூளை பிரகாசிக்கும். நம்பியவர் கெட்டாரா? நம்பாதவர் வாழ்ந்தாரா? ஒரு தாயின் தெய்வ நம்பிக்கையால், புத்தியில்லாது இருந்த நானும் ஓரளவு புத்தியுள்ள வனானேன். என்னுடைய தெய்வ நம்பிக்கையால் நான் எதிர்பாராத அளவிற்குச் சூழ்நிலைகள் வாய்ந்துள்ளன. முப்பத்துமூன்று வருடங் களுக்கு முன்னால் பத்திரிகைத் துறையில் சேர்ந்த போது ப்ரூப் (Proof) படிக்கத் தெரியுமா? என்றார்கள். தெரியும் என்றேன். பழக முடியும் என்று நம்பினேன். பழகிக் கொண்டேன். கவிதை எழுதத் தெரியுமா? என்றார்கள். நம்பினேன் எழுதினேன்.

முடியும் என்றால் முடிகிறது. தயங்கினால் சரிகிறது. கூந்தலை முடிக்க கையில்லாதவர்களுக்குத் தானே சரிந்து விழுகிறது. சீதை பத்தினி என்ற நம்பிக்கையில் தான் ராமன் தைரியமாக இருந்தான். ராமன் வருவான் என்ற நம்பிக்கையில் தான் சீதை உயிரோடு இருந்தாள். இராமன் மீது நம்பிக்கை வைத்தே விபிஷணன் அவனோடு சேர்ந்தான். இராவணன் மீது நம்பிக்கை வைத்தே கும்பகர்ணன் அவனோடு இருந்தான். நம்பினால் கைகொடுப்பது நம்பிக்கை. ஈஸ்வரனை நம்பி, நம்பிவிழு பகவானை நம்பி அவன் பாதார விந்தங்களில் விழு, விழுந்தபின் எழுவதற்கு உன்கைகள்தான் பயன்படுகின்றது என்றால் அந்தக் கைகள் அவனுடையது என்று அர்த்தம். அங்கே போனால் அது கிடைக்காது, இங்கே போனால் இது கிடைக்காது என்று சந்தேகப்பட்டால் நீ எங்கேயும் போகமாட்டாய். எதிலும் முன்னேற மாட்டாய். இருந்த இடத்தில் இருந்தே சாவாய்.